# கலைக்கோபுரம்

கலை இலக்கிய சமூக சஞ்சிகை

இதழ் 01 வைகாசி — கார்த்திகை 2014



இரண்டாம் வருட மாணவர்கள்
சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

வர்தன் வங்கி

# WITH THE BEST COMPLIMENTS FROM DFCC VARDHANA BANK PLC KATTANKUDY BRANCH

SUPREME

Vardhana




DFCC

Vardhana Bank

DFCC

වර්ධන

# கலைக்கோபுரம்

**கலை இலக்கிய சமூக சஞ்சிகை**

இதழ் : 01 | 2014 வைகாசி - கார்த்திகை

**இதழாசிரியர்**

V. விஜயகுமார்

**சஞ்சிகைக்குழு**

(TKS நண்பர்கள்)

V. நிலக்ஷன்

S. பிரபா

S. தினேஸ்குமார்

K. அகிலன்

B. செந்துசன்

**அட்டை வடிவமைப்பு**

S. ஐங்கரன்

**உள்பட வடிவமைப்பு**

S. சாமந்தி

**கணனி வடிவமைப்பு**

V. கலைச்செல்வி

**வெளியீடு :-**

இராசதுரை அரங்கு
சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம்

**விலை:- 100/-**

**தொடர்புகள் :-**

V. **விஜயகுமார்**
(இதழாசிரியர்)

சுவாமி விபுலானந்த அழகியல்
கற்கைகள் நிறுவகம்,
கல்லடி, மட்டக்களப்பு.

T.P - 0770321209

01. இதழாசிரியர் உரை............................ 02

02. அணிந்துரை............................ 03

03. தமிழ் நாடக மரபில்............................ 04

04. கண்ணோட்டம்............................ 09

05. வெளிநாட்டில் வேலை............................ 11

06. மகளீருக்கோர் பெருமை............................ 15

07. சவப்பெட்டி (நாடகம்)............................ 18

08. பண்பாடும் பாரம்பரியமும்............................ 21

09. எனக்காய் நீ............................ 23

10. சிலப்பதிகாரத்தில் நடனச் செய்தி...... 24

11. நானே எனது மக்கள்............................ 28

12. மீரா ஒரு கேள்விக்குறி?............................ 29

13. அழிப்பும் இழிப்பும்............................ 35

14. 1990களுக்குப் பின் நாடகம்............................ 38

15. கல்வி அரங்கம்............................ 41

16. வடக்கு வாசல் வீடு............................ 44

17. பேராசிரியர் சி. மௌனகுரு............................ 46

18. இலங்கையின் இசை வளர்ச்சி............................ 48

19. மட்டக்களப்புக் கூத்துக்கள்............................ 52

20. கடலே ஞாபகமிருக்கின்றதா?............................ 56

21. சிலப்பதிகாரத்தில் காதல்............................ 57

22. திரைக்கதை என்றால் என்ன?............................ 62

23. ஆபிரகாம்லிங்கன்............................ 65

24. அழிந்து வரும் நாட்டுப்புறக்கலை......... 66

25. எனக்கென்று ஒரு சொந்தம்............................ 69

26. சாதி அரக்கா............................ 71

27. ஓவியம் பற்றிய அறிமுகம்............................ 72

28. வாழ்த்துகின்றோம்............................ 77

29. பேராசிரியர் மு. இராமசாமியுடன்......... 78

30. நன்றிகள்............................ 80

## இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து....

சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம் கிழக்குப் பல்கலைக்கழக இரண்டாம் வருட மாணவர்களின் கூட்டு முயற்சியாக இக் "கலைக்கோபுரம்" எனும் சஞ்சிகையை வெளியிட முன்வந்துள்ளோம். இச் சஞ்சிகையானது முற்று முழுவதாகக் கலை இலக்கியத்தின் முக்கியத்துவத்தினைக் கருத்திற் கொண்டு உருவாக்கப் பட்டுள்ளது. இன்றைய காலகட்டத்தில் கலைகளை வளர்த்துச் செல்லவேண்டியவர்களாக இருப்பதனாலும் அதன் தேவை கருதியும் இச் சஞ்சிகையை வெளியிட முன் வந்துள்ளோம்.

ஆறு மாதங்களிற்கு ஒன்று என அரையாண்டு இதழாக வெளியிட சஞ்சிகைக் குழு திட்டமிட்டுள்ளது. இனி வரும் காலங்களில் வாசகர்களின் அனுமதியுடன் காலாண்டு இதழாக வெளியிட முடிவு செய்துள்ளோம். இது பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரை அனைவருக்கும் துணை புரிய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். அது மட்டுமன்றி கலைகள் சார்பான துணுக்குகள் நம்மவரிடமிருந்து வெளிவருவது மிகவும் குறைவாக உள்ளது. இதனால் நமது முன்னோர்களின் கலை வடிவம் மண்ணோடு மண்ணாய் மறைந்து போவதை கருத்திற் கொண்டும் எதிர்கால சந்ததிக்கு ஏதாவது ஒன்றை விட்டுச் செல்லவேண்டும் என்ற ஆதங்கத்தின் விளிம்பாய் இச் சஞ்சிகையை உருவாக்கியுள்ளோம். இதனுள் நாடகம், நடனம், இசை, ஓவியம், சினிமா போன்ற அழகியற் பண்புகள் கொண்ட பாடங்களின் தொகுப்பாக காணப்படுகின்றது.

இனி வரும் காலங்களில் இலக்கியம் பற்றிய ஆரோக்கியமான விமர்சனம் மற்றும் ஒப்பீடு, பாடலாக்கம், நாடக எழுத்துருக்கள் என்பனவும் சமூகத்திற்கு தேவையான விடயங்களையும் இக்கலைக்கோபுரம் உங்களுக்கு பரிசளிக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இச் சஞ்சிகை செயற்பாட்டை ஊக்குவித்த எம் நிறுவகத்தின் விரிவுரையாளர்கள், நண்பர்கள், வாசகர்கள், D.F.C.C வர்த்தன வங்கி அங்கத்தவர்கள், விளம்பரதாரர்கள், போன்றோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். இவ்விடத்தில் நன்றிகூறத் தவறிய நெஞ்சங்களிற்கும் எமது கலைக்கோபுரம் சார்பாக நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

# அணிந்துரை

சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவக இரண்டாம் வருட இசை, நடன, நாடக மற்றும் கட்புலத்துறை பட்டதாரி மாணவர்களின் எண்ணக்கருவினூடாக உருவான இந்த "கலைக்கோபுரம்" எனும் சஞ்சிகை முற்று முழுதான பட்டதாரி மாணவர்களின் ஆக்கங்களைக் கொண்டு அவர்களின் சொந்த நிதியினூடாக ஒரு மாணவர் மலராக மலர்ந்திருக்கின்றது.

இசை, நடன, நாடக மற்றும் கட்புலத்துறை போன்ற கவின் கலைகளின் அரங்க ஆற்றுகைகளில் மிகவும் திறமை பெற்ற எமது நிறுவக பட்டதாரி மாணவர்கள் அக் கலைகள் பற்றிய தங்கள் எழுத்து ஆற்றலை இச்சஞ்சிகையிலுள்ள தங்களது கட்டுரைகளினூடாக வெளிக் கொணர்ந்திருக்கின்றார்கள். "மாற்றமொன்றுதான் மாறாதது" என்ற கருத்துக்கமைய சதா மாறிக்கொண்டிருக்கும் இவ் உலகில் காலத்துக்கு காலம் கவின் கலைகளும் காலத்தின் தேவைக்கேற்ப மெருகூட்டப்பட்டுக் கொண்டிருக்கும் அதேவேளையில் சில பாரம்பரிய கலைகள் மறக்கப்பட்டும், அருகிக்கொண்டும் வருகின்றன. அவ்வகையில் இக்கலைகள் பற்றிய ஆவணப்படுத்தல் மிக முக்கியமான தொன்றாகவுள்ளது. அதற்கு "கலைக்கோபுரம்" போன்ற மாணவர் சஞ்சிகைகள் ஆராயச்சிக் கட்டுரைகள், புத்தகங்கள் போன்றவைகள் களம் அமைத்துக் கொடுக்கின்றன. அரங்க ஆற்றுகையின் திறமையுடன் எழுத்தாற்றல் திறமையும் ஒருங்குசேரும் போதுதான் ஒரு முழுமை பெற்ற "நுண்கலைப் பட்டதாரி" உருவாக முடியும். இதை தூரநோக்காகக் கொண்டு இசை, நடன, நாடக மற்றும் ஓவியம் சார்ந்த கட்டுரைகளின் தொகுப்பாக வடிவமைக்கப்பட்டுள்ள இக்"கலைக்கோபுரம்" எனும் சஞ்சிகையின் ஆக்கத்திற்கு வழிகோலிய சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவக இரண்டாம் வருட பட்டதாரி மாணவர்களைப் பாராட்டி, தொடர்ந்து வரும் இரண்டாம் வருட மாணவர்களும் இப்பணியைத் தொடர வேண்டும் என்று மனமார வாழ்த்துகிறேன்.

இச் சஞ்சிகையின் ஆசிரியர் தனது உள்ளத்திலிருந்து கூறியபடி "நமது முன்னோர்களின் கலை வடிவம் மண்ணோடு மண்ணாக மறைந்து போவதைக் கருத்திற் கொண்டும், எதிர்கால சந்ததிக்கு ஏதாவது ஒன்றை விட்டுச் செல்ல வேண்டும் என்ற ஆதங்கத்தின் விளிம்பாய் இந் நிறுவகப் பட்டதாரி மாணவர்களின் சொந்த நிதியினூடாக செயல்வடிவம் பெற்ற "கலைக்கோபுரம்" எனும் இச் சஞ்சிகை எதிர்காலத்தில் இந்நிறுவகத்தின் பெயர் சொல்லும் ஒரு தரமான இலக்கிய சஞ்சிகையாகக் கோபுரம் போன்று உயர்ந்து மிளிரும் என்பதில் ஐயமில்லை.

வாழ்த்துக்களுடன்

கலாநிதி.க.பிரேமகுமார்
பணிப்பாளர்
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்

# தமிழ் நாடக மரபில் பம்மல் சம்பந்தமுதலியாரின் தனித்துவம் (1873-1964)



தமிழ் நாடகம் கால ஓட்டத்தில் படிப்படியாக வளர்ந்து பல்வேறு தாக்கங்களுக்கு உட்பட்டு இன்று ஒரு நிலையை எட்டியுள்ளது. நாடக வளர்ச்சிக்கு எத்தனை வகைகளில் நாடகக் கலைஞர்களும் அறிஞர்களும் உதவியிருக் கிறார்கள் என்பதை தமிழ் நாடக வரலாறு கூறும். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் நாடக உலகில் நாடகக்கலை பற்றி மக்கள் கொண்டிருந்த இழிவான கருத்துக்களை நீக்கித் தமிழ் நாடகக்கலை தலைதூக்க பெரும் சாதனைகள் செய்தவர் பம்மல் சம்மந்த முதலியார். இதிகாச புராண நாடகங்களை நடத்திவந்த தொழில்முறை நாடகக் குழுவினரின் போக்கை மாற்றியதோடு நடிகர்களைத் கூத்தாடிகள் என்று அழைக்கப்பட்ட வழக்கத்தை மாற்றி அவர்களை கலைஞர்கள் என்று சிறப்பாக குறிப்பிடும் நிலைக்கு உயர்த்தினார்.

சம்மந்த முதலியார் 1873ல் பம்மல் விஜயரங்க முதலியாருக்கும் மாணிக்கவேலு அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். வழக்கறிஞராகவும், நீதிமன்றத் தலைவராகவும் சேவை செய்த இவர் சிறுவயது முதலே நாடகக் கலையின் ஆர்வம் பெற்றிருந்தமையால் தம் தொழிலில் ஓய்வுபெற்ற பின்னர் முழு நேரமும் நாடகத் துறைக்கு தொண்டாற்றியமை குறிப்பிடத்தக்கது.

நாடகம் தெருக்கூத்து என்றும் சிற்றூர் மக்கள் மட்டும் கண்டுகளிப்பது என்றும் அன்றைய சமூகத்தில் காணப்பட்ட கருத்தை மாற்றி உயர்குடியில் பிறந்தவர்கள், புகழ்பெற்ற அரசியல்வாதிகள், அறிஞர்கள் போன்றோர்களைத் தம் நாடகங்களில் நடிக்க வைத்தார். அதற்கமைய 1897ல் சுகுணவிலாச சபையைத் தொடக்கி வைத்து அதில் நன்கு படித்தவர்கள், சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர்களைக் கொண்டு உருவத்திலும் உள்ளடக்கத்திலும் வேறுபட்ட தொண்ணூற்றி நான்கு நாடகங்களை இயற்றி மேடையேற்றி யுள்ளார். இவற்றை உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமாக 500ற்கும் மேற்பட்ட இடங்களில் சுகுணவிலாச சபையின் மூலம் மேடையேற்றியுள்ளார்.

சி.டி ராமசாமி ஐயர் சத்தியமூர்த்தி போன்றோர் இக்குழுவைச் சார்ந்த சிறந்த நடிகர்களாக விளங்கினர். நாடக நடிகர்கள் மது அருந்தக் கூடாது, நடிப்பில் சிறந்தவன் என்ற ஆணவம் கொள்ளக்கூடாது, சக நடிகரோடு ஒத்துப் பழக வேண்டும் என்ற கட்டுப்பாடுகளோடு தன் நாடகக் குழுவை வழிநடத்திய பெருமை பம்பல் சம்பந்த முதலியாரையே சாரும். இவரைப் பின்பற்றியே இலங்கையில் கலையரசு சொர்ணலிங்கம் நாடக அரங்கேற்றங்களை மேற்கொண்டார்.

இவர் முதன் முதலில் காளிதாசரின் "சாகுந்தலம்" நாடகத்தை மோனியர் வில்லியம்ஸின் ஆங்கில மொழிபெயர்ப்பின் துணைகொண்டு தமிழில் மொழிபெயர்த்ததோடு பின்னர் பல ஆங்கில சமஸ்கிருத நாடகங்களை மொழிபெயர்த்து மேடையேற்றினார். நாடகங்களை வடமொழி, ஆங்கிலம், லத்தீன், பிரெஞ்சு, ஜேர்மன் போன்ற மொழிகளிலிருந்து அவற்றை தமிழ்ப்படுத்தி அரங்கேற்றியதன் மூலம் நாடகங்கள் பற்றிய பரந்த பார்வையை தமிழக மக்கள் மத்தியில் ஏற்படுத்தினார். நடிக்கும் முறைக்கு பார்ஸி நாடகக் குழுக்களை பின்பற்றிய சம்பந்த முதலியார் நாடகங்கள் எழுதுவதற்கு ஆங்கில நாடக அமைப்பைப் பின்பற்றினார்.

மேலும் தன்னால் எழுதப்பட்ட எல்லா நாடகங்களிலும் ஏதாவதொரு பாத்திரத்தை ஏற்று நடிப்பது அவரது இயல்பு. கதாநாயகனாக நடிப்பது என்றில்லாமல் எந்த சிறிய வேடமாயினும் ஏற்று நடித்துள்ளார். குணச்சித்திரப்பாத்திரம் மற்றும் பெண் பாத்திரங்களில் சிறப்பாக நடித்துள்ளார் என்பதை மறுக்க முடியாது. தமிழ் நாடகமேடைக்கு புதிய வழிகாட்டியாகத் திகழ்ந்த முதலியார் பாடலும் அவற்றின் விளக்க உரையுமாக இருந்த நாடகப்பாணியை மாற்றி உரையாடலிற்கு முக்கியத்துவம் அளித்து நாடகங்களை உருவாக்கினார். அதுமட்டுமன்றி அக்காலத்தில் நடிகர்கள் மேடைக்கு வரும்போ தெல்லாம் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டும் பாடிக் கொண்டும் வரும் நிலையை மாற்றி இயல்பாக நடிக்கச் செய்தார். அக்காலத்தில் அரசவேடம் தரித்தவர்களெல்லாம் தமது காலை இழுத்து இழுத்து தனிப்பட்ட முறையில் நடிப்பது வழக்கம். இதனை மாற்றி பாத்திரத்திற்கு ஏற்ப கம்பீரமான இயல்பான நடை நடக்க நடிகர்களை பயிற்றுவித்தார். இதன் மூலம் நாடக மரபு என்பது பயிற்சிகள் மூலம் வரவேண்டிய கலை என்பதை உணரச் செய்தவர் இவரே ஆவார். இவர் நாடக மேடைகளிலும் கூடுதலான மாற்றங்களைக் கொண்டுவந்தார்.

தான் பார்க்கும் நாடகக்குழுக்களில் கையாளப்படுகின்ற புதிய உத்திகளைத் தமது நாடகத்திலும் இணைத்துக்கொள்வதோடு விடிய விடிய ஆடப்பட்ட தமிழ் நாடக மரபை மூன்று தொடக்கம் ஐந்து மணித்தியாலங்களிற்குள் சுருக்கி அமைத்தார்.

இந்தியாவில் "ஓரியண்டல் ட்ரமெட்டிக் சொசைட்டி" என்னும் நாடகக்குழு காணப்பட்டது. இதில் பார்ப்பவர்கள் மட்டும் இருந்ததைக் கண்டு சாதிக்கெதிராக வெகுண்டார். இது சுகுணவிலாச சபைக்கு முன்பே தோன்றியது. இந்த சாதிக்கெடுபிடிக்கெதிராக உருவாக்கப்பட்ட நாடகமே "பிராமணனும் சூத்திரனும்" என்பதாகும். மாதம் மும்மாரி பொழிந்ததா?...... போன்ற உண்மைக்கு மாறான உரையாடல் நிகழ்வுகளை வெறுத்தார். இவர் "முத்மங்காதா" நாடகத்தை உரையாடல், பாடல் இன்றி தோற்றக்காட்சிகள் மூலம் முதன் முதலாக அரங்கேற்றினார். இது மௌனக்காட்சி என்ற நாடக வகைகளைச் சார்ந்ததாகக் கூறப்படுகிறது. நாடகங்களை எழுதுகின்ற ஆசிரியர்கள் தாம் படைத்துள்ள நாடக மாந்தர்களின் உள்ளுணர்வு போராட்டங்களை விவரிக்க வேண்டும். அப்போது தான் அது பார்ப்போர் மனங்களை தூய்மைப்படுத்தும் என்பதற்கமைய நாடகங்களை உருவாக்கிய பெருமைக்குரியவர் பம்மல் சம்பந்தர் முதலியார். அதற்கமைய நான் குற்றவாளி, இல்லறமும் துறவறமும், சங்கீத பைத்தியம், கண்டதும் காதல், தாசிப் பெண், வைகுண்ட வைத்தியர், மனோகரா, இரு நண்பர்கள் போன்ற நாடகங்களை மேடையேற்றினார். அத்தோடு இவரது மொழிபெயர்ப்பு நாடகங்களாக சாகுந்தலம், ரத்தினாவளி, விக்ரமோர்வசியம், மளவிகாக்நிமித்தம் என்பன காணப்படுகின்றன. மேலும் அவர் மகனையும் (சிறுதொண்டர் மகனாக லோகிதாசனாக) நடிக்கவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

19ம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில் மக்கள் இராஜா இராணிக் கதைகளையே மிகுதியாக அறிந்திருந்தனர். ஆதலால் அப்போது இன்பியல் கதைகளே நாடகமாக அரங்கேற்றப்பட்டன.
இதையொட்டி முதலியாரும் இருபத்தி நான்கு இன்பியல் நாடகங்களை ஆரம்பத்தில் எழுதியுள்ளார். உதாரணமாக இரு சகோதரிகள், புஸ்பவள்ளி, உத்தமபத்தினி, மெய்க்காதல் போன்றவற்றை குறிப்பிடலாம்.

மேலும் மிகுதியான நகைச்சுவையுடன் சில நாடகங்கள் இவரால் படைக்கப்பட்டமையும் குறிப்பிடதக்கது. அதில் சதிசக்தி, சங்கீதப்பைத்தியம், சோம்பேறி, சகுனம்பார்த்தல், வைகுண்ட வைத்தியர் போன்ற நாடகங்கள் பார்வையாளர்களின் பெரும் வரவேற்பைப் பெற்றதாகக் கூறப்படுகிறது.

அத்தோடு அங்கத நாடகங்களை (satirical plays) எழுதிச் சமூக சீர்திருத்தப் பணிகளை மேற்கொண்ட இவர் சமூகத்தில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளை அணுகுவதுடன் தனி மனித குறைகள், குடும்பச் சிக்கல்கள், சமூகக்குறைபாடுகள் ஆகியவற்றை அரங்கிற்கூடாக வெளிப்படுத்தினார். இதற்குச் "சரிபாதி" என்ற நாடகம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இவர் சமூக நாடகங்களை 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தே எழுதியிருக்கிறார். சமூகப் பிரச்சினைகளைக் காட்டுவதுடன் அவற்றால் ஏற்படும் தீய விளைவுகளையும் காட்டுகிறார். அத்தோடு இத்தகைய பிரச்சனைகளுக்கு உரிய தீர்வுகள் என்ன என்பதையும் காட்டுகிறார். சிறுசிறு பிரச்சனைகளை ஓரங்க நாடகங்களாகவும், பெரும் சிக்கல்களை முழு நீள நாடகங்களாகவும் படைத்துள்ளார். இதற்குப் பொன் விலங்குகள், இல்லறமும் துறவறமும், பிராமணமும் சூத்திரனும் என்பவை சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். அத்தோடு வரலாற்று நிகழ்ச்சிகளின் அடிப்படையில் கலைத்தன்மை சிறக்க "புத்த அவதாரம்" என்னும் நாடகத்தை எழுதியுள்ளமையும் அவரது புலமையை வெளிப்படுத்தி நிற்கிறது.

இவர் இலக்கியங்களை பொருளாலும் பெயராலும் நேர் மாற்றி நையாண்டி (burlesque) நாடகங்களைச் செய்தார். எடுத்துக்காட்டாக அரிச்சந்திரன் உண்மையை தவிர வேறு எதையும் பேசமாட்டாள். ஆனால் சந்திரகாரி பொய்யை தவிர வேறு எதையும் பேசமாட்டாள். (உ-ம்) சந்திரகாரி. இதிகாச புராண கிளைக் கதைகளைக் கொண்டு பதின் மூன்று புராண நாடகங்களைப் படைத்துள்ளார். இதற்கிணங்க சிறுத்தொண்டன், மார்க்கண்டேயன், யயாதி, கொடையாளி கர்ணன் போன்ற நாடகங்களை உருவாக்கினார்.

தமிழ் மரபில் துன்பியலுக்கு இடமேயில்லை. இத்தகைய இறுக்கமான மரபுமுறையை மாற்றி துன்பியல் நாடகங்களை அரங்கேற்றினார். (இரு நண்பர்கள், உண்மையான சகோதரன், கள்வர் தலைவன்) போன்ற வேற்று மொழி நாடகங்களை தமிழ் மொழிக்கு மாற்றும் போது பல அம்சங்களைத் திருத்தி அமைத்தார். அதாவது பாத்திரப் பெயர்களை மாற்றித் தமிழ்ப்படுத்தினார். மேலும் இடப்பெயர்கள், பறவை மிருகப்பெயர்கள் என்பவற்றை மாற்றினார். அத்தோடு பழக்கவழக்க முறைகள், மரபு சொற்தொடர் வழக்குகள், பழமொழிகள் போன்றவற்றை மேல்நாட்டு முறைகளிலிருந்து தமிழ் முறைகளுக்கு மாற்றினார்.

அதுமட்டுமன்றி சிறுவர்களுக்கு ஏற்ற முறையில் பறவைகள், விலங்குகளைப் பாத்திரங்களாகக் கொண்டு "பாட்டாலிபுரத்து பாடகர்கள்" என்ற நாடகத்தை எழுதினார். இதைக் கழுதை, நாய், பூனை, சேவல் போன்ற நான்கு பாத்திரங்களை வைத்துப் படைத்துள்ளமை சிறப்பானது.

பம்மல் சம்மந்த முதலியார் தனது நாடகத்தில் நகைச்சுவைக்காக இடைக்காட்சிகள் அமைப்பதோடு நாடகப்போக்கில் நடிகர்களையே நகைச்சுவை வழங்கவும் செய்தமை தமிழ் அரங்கப்போக்கில் ஒரு சிறப்பம்சம் ஆகும். இது தவிர நாடகத்திற்கு இலக்கிய தகுதியைக் கொண்டு வந்த முதலியார் வாழ்வியலைப் படம்பிடித்துக்காட்டவும் சமுதாய சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும் நாடக அரங்கை கருவியாகப் பாவித்தார்.

சுகுணவிலாச சபையின் மூலம் முதலியார் "Indian stage" அதாவது "இந்திய நாடக மேடை" என்ற இதழை வெளியிட்டதோடு மட்டுமன்றி நூற்றியெட்டு நூல்களைக்கொண்ட ஒரு நூலகத்தையும் உருவாக்கினார். இது பிற்காலத்தில் 1670ல் நாடக நூல்களைக் கொண்டு வளர்ச்சி அடைந்தது. தமது நாடக மேடை அனுபவங்களை பிற்கால நாடக நடிகர்களுக்கு பயன்படும்படி தமது "நாடகமேடை நினைவுகள்" என்ற நூலை எழுதினார். இவரது நாடகத்தமிழ் என்ற நூல் தமிழ் வரலாற்றினை தொடக்க காலத்தில் இருந்து படித்து வரவேண்டும் என்ற நோக்கத்தினால் எழுதப்பட்டது எனலாம். அத்தோடு "நடிப்புக்கலையில் தேர்ச்சி பெறுவது எப்படி", "என் சுயசரிதம்", "நான் கண்ட நாடகக்கலைஞர்கள்" போன்ற நாடக நூல்களையும் எழுதியுள்ளார்.

இவ்வாறான பல தளங்களில் தன்னை நாடக உலகில் தனித்துவப்படுத்தி பல புதிய மாற்றங்களைத் தமிழ் நாடக அரங்கிலே கொண்டுவந்த கலைஞர் பம்மல் சம்மந்த முதலியார். இதன் பெறுபேறாக 1916ல் ஆங்கிலேய அரசினால் "ராவ் பகதூர்" என பாராட்டப் பெற்றார். நாடகக் கலைஞர்களினால் 1944ல் "நாடகப் பேராசிரியர்" எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 1963ல் "பத்மபூசணம்" என்ற பட்டத்தினைக் குடியரசு தலைவரிடம் பெற்றார். இவ்வாறு தமிழ் நாடகத் துறையில் தனித்துவமான பணிகளையாற்றி பல புகழையும் பெருமையினையும் பெற்ற பம்மல் சம்பந்தனாரை தமிழ் நாடக உலகம் "தமிழ் நாடகவியலின் தந்தை" எனவும் "தமிழ் ஷேக்ஸ்பியர் உலகம்" எனவும் பாராட்டுவது சிறப்பிற்குரியது.

கிஸ்ணவேணி பாலசிங்கம்
நாடகத்துறை தற்காலிக விரிவுரையாளர்
சு.வி.அ.க.நி, கிழக்குப் பல்கலைக்கழகம்.

பிறர் முதுகுக்குப் பின்னால் நாம் செய்ய வேண்டிய வேலை தட்டிக் கொடுப்பது மட்டும் தான்……

விவேகானந்தர்

# கண்ணோட்டம் (அறிந்து கொள்வோம்)

- பெங்குயின் பறவைகள் ஒரே இடத்தில் 7 லட்சம் வரை எண்ணிக்கையில் கூடும்.
- கடலில் 30,000 மீன் வகைகள் உள்ளதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். உலகில் பூச்சி இனத்திற்கு அடுத்து மீன் இனங்களே அதிகம் என்று ஆராய்ச்சி வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர்.
- விமானத்தில் பறந்தவாறே பதவி பிரமாணம் எடுத்துக் கொண்ட அமெரிக்க ஜனாதிபதி "லிண்டன் பி. ஜோன்சன்".
- நைலோன் துணியால் கரன்சி நோட்டுக்களை அடிக்கும் நாடு ஜேர்மனி.
- முதலாம் உலகப்போரில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 90 இலட்சம். இரண்டாம் உலகப் போரில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 கோடி.
- பிளாஸ்டிக்கில் கரன்சி நோட்டுக்களை முதலில் வெளியிட்ட நாடு அவுஸ்திரேலியா.
- சூரியகாந்தி வகையைச் சேர்ந்த காசினி என்ற செடியில் வேரைக் காயவைத்து வறுத்து பொடி செய்வதுதான் சிக்கரி பவுடர் கோப்பிப் பொடியுடன் மணத்துக்காகச் சேர்க்கின்றார்கள்.
- உலகிலேயே அதிக இலைகள் கொண்டது சைப்பிரஸ் மரம். இதில் 4 முதல் 5 கோடி இலைகள் இருக்கும்.
- ஒரு கிலோ தேனில் 65 முட்டைகளில் உள்ள சத்து உள்ளது.
- உலகில் அதிகமான மக்களை வாட்டும் நோய் பல்வலி.
- உலகில் கோதுமையைப் பயன்படுத்தும் மக்கள் 35 சதவீதம்.
- குதிரையின் கர்ப்ப காலம் 11 மாதங்கள்.
- மனித உடலில் உள்ள உணவுக்குழாயின் நீளம் 30 அடி.
- சிலந்தி ஒரு மணிநேரத்திற்கு சுமார் 112 மீற்றர் வரையான நூலினை உருவாக்கும்.
- உலகில் முதன் முதலில் சைக்கிள் ரேஸ் பாரிஸில் 31.05.1868ல் நடந்தது.
- ஜப்பான் தட்டச்சு இயந்திரத்தில் 2863 எழுத்துக்கள் உள்ளன.
- வீட்டு ஈயின் விலங்கியல் பெயர் "மஸ்கா டொமஸ்டிகா".
- சோடியத்தின் சிறப்பு தண்ணீரில் எரியும்.


- நமக்கு 32 பற்கள் இருப்பது அனைவருக்கும் தெரியும் அவற்றின் வேலை
    - கடிப்பதற்கு 08 பற்கள்
    - கிழிப்பதற்கு 04 பற்கள்
    - வெட்டுவதற்கு 08 பற்கள்
    - அரைப்பதற்கு 12 பற்கள்
- மனித உடலில் வியர்க்காத பகுதி உதடு
- மனிதத் தலையில் உள்ள மொத்த எலும்புகளின் எண்ணிக்கை 22 ஆகும்.
- சிரிக்கவும், 'உம்' மென்றிருக்கவும் எத்தனை தசைகள் அவசியமாகின்றன.
    - சிரிக்க 17 தசைகள்
    - உம்மென்றிருக்க 43 தசைகள்

- மனிதனை அடையாளம் காண கைரேகை பயன்படுத்தப்படுகிறது. அது போல் மாட்டை அடையாளம் காணப் பயன்படுத்துவது மூக்குரேகை.
- இதயத்தில் நான்கு அறைகள் உள்ளன.
- மனிதனுடைய காதுகளால் 130Hz அளவு சத்தத்தைப் பொறுத்துக் கொள்ள முடியும்.
- உடலில் இரத்தம் பாயாத பகுதி கருவிழி ஆகும்.
- மனிதன் உயிரிழந்த பின்பு அவனது உடற்பாகங்கள் உயிர் வாழ் நேரம்.
    - கண் - 31 நிமிடம்
    - மூளை - 10 நிமிடம்
    - கால் - 04 மணித்தியாலம்
    - தசை - 05 நாட்கள்
    - இதயம் சில வினாடிகள்
- மனித உடலில் 70 சதவீதம் நீர் உள்ளது.
- மனித மூளை நினைவாற்றலுக்காகப் பத்தாயிரம் கோடி செல்கள் உள்ளன.

**வி. சுதர்ஷன்**

நீ வெளிச்சத்தில் நடந்தால்...
உலகமே உன்னைப் பின் தொடரும்···
நீ இருட்டில் நடந்தால்···
உன் நிழல் கூட உன்னைப் பின் தொடராது...

# வெளிநாட்டில் வேலை



அயல்நாட்டு அகதிகள்!

டொலருக்கும், ரியாலுக்கும்

வாழ்க்கையை அடகுவைத்து மீட்க

முடியாமல்

நீரிலேயே மூழ்கிக் கிடக்கும்

மீன் குஞ்சுகள்!

பண்டிகை நாட்களில்

குடும்பத்தோடு குதூகலிக்க

முடியாமல் Happy New Year, Happy Festival என்று

மனம் முழுக்க சோகத்தோடு கைப்பேசியில்

கூக்குரலிடும்

கையாலாகாதவர்கள்

இங்கே! கண்ணே கனியே

என்றெல்லாம்

காதலியை நெஞ்சுருக

கொஞ்சி மகிழ அவள்

நேரில் இல்லை
கணனி பொறியிலும்
கைப்பேசியிலும்
காதலியின் குரல்
கேட்டுக் கேட்டு எங்கள்
காதல் கூட
இங்கு கொமர்ஷியல்
ஆகிப் போனது...
தொலைதூரக் காதல்
செய்தே தொலைந்து போனவர்கள்
நாங்கள்
நான் இங்கே நல்லா இருக்கிறேன்
என்று எப்போதும் சொல்லும் Default
குரலுக்கு சொந்தக்காரர்கள்
உணவில்
குறையிருந்தாலும்
உடல் நலக் குறையிருந்தாலும்
First Class என்று சொல்லியே
பழகிப் போனவர்கள்
வியர்வையில்
நாங்கள் உழன்றாலும்
விடுமுறைக்குப் போகுமுன்
வாசனைத் திரவியம்



வாங்க மறுப்பதில்லை

எங்கள் வியர்வையின்

வாசம் வீட்டின் உள்ளோர்

அறியாமல் இருக்க

கணிப் பொறிக்குள்


அகப்பட்டுக் கொண்ட

எலிகள் நாங்கள்,

கலப்பை பிடிக்கவில்லை, ஆனால்!

நாங்கள் களைத்துத் தான்

போகின்றோம் எண்ணெய்க்



கிணற்றித் தவளைகள் நாங்கள் வாயுக் குழாயில்

சிக்கிக் கொண்ட

வாயில்லாப் பூச்சிகள்

திரைகடலோடித் திரவியம்

தேடி திசைமாறிப் போன

பறவைகள் நாங்கள்,

எங்களுக்கும் மாதக்கடைசி உண்டு

என்பது பலருக்கு புரிவதில்லை

உனக்கென்ன

விமானப் பயணம், வெளிநாட்டு வேலை

என்றெல்லாம்

உள்ளூர் வாசிகள் விடும்

பெரு மூச்சு வளைகுடா நாட்டின்

வெப்பத்தை விட

சற்று அதிகமாகவே சுடுகிறது

ஆரம்பத்தில் முதலீடில்லாத் தொழில் இது

என்று பெருமிதப்பட்டோம்

எங்களுக்கே தெரியாமல்

எங்கள் இளமையை அல்லவா

முதலீடு செய்திருக்கின்றோம்

இப்போது தான் புரியத் தொடங்கியது

சேர்ந்தே நரைக்கவும் தொடங்கியது

நாங்கள் முதலீடு செய்தது எங்கள்

வாழ்க்கையை! வாலிபத்தை!

இழப்பீடு கிடைக்காத இழப்பு இது

யாருக்காக? எதற்காக? ஏன்?

தந்தையின் கடன்!

தங்கையின் திருமணம்!

தம்பியின் படிப்பு!

சொந்தமாய் வீடு!

குழந்தையின் எதிர்காலம்



இப்படி ஆயிரம் காரணம்

தோரணம் போல்

கண் முன்னே வந்து நிற்க

வெளிநாட்டில் வேலை எனக்கு..........

**சோ. தினேஸ்குமார்**

## மகளிருக்கோர் பெருமை.....



உலகளாவிய ரீதியில் மார்ச் 8ம் திகதி சர்வதேச மகளீர் தினமாகக் கொண்டாடப் படுகின்றது. மகளீரைப் போற்றியே இந்நாளை மகளீர் தினமாகக் கொண்டாடுகின்றனர். இன்றைய உலகில் ஆண்களுக்குச் சரிநிகர் சமமாகப் பெண்களும் காணப்படுகின்றனர். பெண்களைப் பற்றிய பல உயர்வான கருத்துக்களும் நம்மிடையே பரவிக் காணப்படுகின்றன. நாம் வாழும் இப் பூமியையும் பூமித்தாய் என்று பெண்ணுக்கே ஒப்பிடுகின்றனர். பெண்கள் ஓர் உயிரை உருவாக்கும் வல்லமையுடன் இவ்வுலகில் இறைவன் படைத்திருக் கின்றான். நம் இடையிலும் "அம்மா" என்ற வார்த்தைக்கும் அம்மாவின் பாசத்திற்கும் இணையாக இவ்வுலகில் எதுவும் ஈடுகிடையாது. மாதா, பிதா, குரு, தெய்வம் என்னும் வரிசையிலும் தாய்க்கே முதலிடத்தை வழங்கியுள்ளனர். "தாயில் சிறந்ததொரு கோயிலும் இல்லை" என்று கூறி தாயின் பெருமையை மேலோங்கச் செய்துள்ளனர்.

எம்மை இவ்வுலகத்திற்கு அறிமுகப்படுத்தியவள் ஓர் பெண் தான். பெண்மைக்கு பொறுமை என்னும் அர்த்தமும் உண்டு. ஓர் குழந்தையை பத்து மாதம் சுமந்து தன் உதிரத்தைப் பாலாக்கி தன் தூக்கத்தை மறந்து இரவு, பகல் கண்விழித்து பாதுகாத்து வளர்த்து இந்த உலகத்தை எமக்கு அறிமுகம் செய்பவளும் பெண்தான். என் தந்தை என்று நாம் கூற நமக்கு வழி செய்தது தாய்தான் ஆரம்பகாலத்தில் தாய்வழி சமூகம் காணப்பட்ட போதும் அது நீடித்து நிலைக்கவில்லை. பின் நம் சமூதாயம் தந்தை வழி சமுதாயமாக மாற்றம் பெற்றது. அன்றைய நிலையில் பெண் அடிமையாகத் தான் சமூகத்தில் வாழ்ந்து வந்தாள்.

பெண்களுக்காக குரல் கொடுத்த பாரதியார் வாழ்ந்த காலத்தில் பெண்களின் நிலையைப் பார்க்கும் போது கல்வி என்பது பெண்களுக்கு ஓர் எட்டாக் கனியாகவே காணப்பட்டது. பெண்களுக்கு சுதந்திரம் இல்லாத நிலையே காணப்பட்டது. தனது கருத்தை வெளிப்படுத்த முடியாத நிலையில் தான் அன்றைய பெண்கள் வீட்டுக்குள் அடைபட்டு அடிமையாக வாழ்ந்தனர். இதனை பார்த்த பாரதியார்

பெண்களைப் பற்றிப் பல கவிதைகள், பாட்டுக்கள் என்பவற்றின் மூலம் பெண் விடுதலைக்குக் குரல் கொடுத்தார். பெண்கள் 'நிமிர்ந்த நன்நடையும் நேர் கொண்ட பார்வையும் நிலத்தில் யாருக்கும் அஞ்சாத செருக்கும்....................' என்ற பாடல் மூலம் பெண்கள் இந்த உலகத்தில் எவ்வாறு போற்றப்பட வேண்டும் என்று கூறி அவளே புதுமைப் பெண் என்றும் கூறியுள்ளார்.

உலகத்தின் தாய் என்று "அன்னை தெரேசாவை" சிறப்பித்துக் கூறுகின்றனர். "கல்பனா சவ்லா" என்ற பெண் விஞ்ஞானி விண்வெளிக்குச் சென்று பெண்களின் வீரத்தையும், தைரியத்தையும் உலகிற்கு நிரூபித்துக் காட்டியுள்ளார். உலகின் முதல் பெண் பிரதமர் "ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவும்" இலங்கையின் பெண் ஜனாதிபதியாக "சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்கவும்" ஆட்சி செய்துள்ளனர். இந்தியா அந்நியர் ஆட்சியில் இருக்கும் போது தமது நாட்டில் சுதந்திரத்துக்காகப் போராடிய பெண்களில் ஜான்சிராணி தனது வீரத்தை இவ்வுலகிற்குப் பறை சாற்றியுள்ளார்.

ஆண்களை விடப் பெண்கள் உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் மென்மையானவர்களாக உள்ள போதும் இவ் விஞ்ஞான உலகில் ஆண்களுக்கு சரிநிகராகப் பெண்களும் காணப்படுகின்றனர் என்று உரக்கக் கூறினாலும் பெண்களுக்கு ஏற்படக் கூடிய கொடுமைகள் இன்றும் உலகளாவிய ரீதியில் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. அதில் சில வெளிச்சத்துக்கு வருகின்றன. சில இருளுக்குள் இருளாகவே மறைந்து காணப்படுகின்றன. இந்தியாவில் புதுடெல்லியில் ஓடும் பஸ்ஸில் மருத்துவக்கல்லூரி மாணவியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய செய்தி உலக ரீதியாக அறியப்பட்டதே.

பெண்களில் பெருமையாக மதிக்கின்ற அன்னை தெரோசா, சோனியாகாந்தி, பிரதீபா பட்டேல் போன்ற பெண்களின் ஆட்சி நிலவும் நாட்டில் தான் இப்பெண்ணின் பெண்மை கலங்கடிக்கப்பட்டது. இவ்வாறு பெண்களைப் பெருமை கூறி அவர்களைப் போற்றும் சமூதாயம் தான் அவர்களைக் கலங்கடிக்கச் செய்கின்றது. பெண்களை தெய்வமாக்கி வழிபாடு செய்யும் உலகில் தான் பெண்களைக் காமத்தின் இச்சைப் பொருளாக்கி விளையாடும் சமூகம் காணப்படுகின்றது. இன்றும் பெண்சிசுக்களை அழித்துக் கொண்டுதான் இருக்கின்றனர்.

பல பெண்கள் சீதனக் கொடுமை தாங்க முடியாமல் இறந்து கொண்டுதான் இருக்கின்றனர். வேலை செய்யும் இடங்களில் பல வழிகளில் அடிமைகளாகக் காணப்படுகின்றனர். இவை யாவும் வெளிச்சத்துக்கு வருவது இல்லை. சில வேளைகளில் வெளிச்ச த்துக்கு வருகின்ற போதுதான் அது பேசப்படுகின்றது. இன்றும் பெண்கள் அடிமைகளாகத்தான் இருக்கின்றார்கள்.

இவ்வாறு பெண்கள் என்று பெருமித்துப் பேசப்படும் இவ் உலகில் பெண்கள் தலை நிமிர்ந்து நடக்கவும் தமது உரிமைகளைப் பெறவும் இச் சமூதாயத்தின் ஒத்துழைப்பு என்றுமே முக்கியமானது. 'பெண்களை மதிப்போம் பெண்மையைப் போற்றுவோம்' பாரதி கண்ட புதுமைப் பெண் என்றும் இப்பார் உலகில் வாழ்க.....

'வாழ்க பெண் வளர்க பெண்ணியம்'

**சுபத்திரா கணேசமூர்த்தி**



**இறக்கத்தான்**
**பிறந்தோம்**
**அது வரை**
**இரக்கத்தோடு**
**இருப்போம் !!!**

**அன்னைத் திரேசா**

# சவப்பெட்டி (நாடகம்) - விருதுகள்

## நாடகக் கரு

விழிப்புணர்வு இல்லாமல் அறியாமையால் சிக்கித்தவிக்கும் மக்களின் போராட்டமும் அடிமைப்படுத்தும் வர்க்கத்தின் மிதமிஞ்சிய கொடூரமும் குறியீட்டுப் பாங்கில் சொல்லப்பட்டுள்ளது.

<u>அரங்கில்</u>

வி. சுதர்ஷன் - வில்லன்
மெ. கேதீஸ்வரன் - விழிப்பு

அமல்ராஜ்
ஞானசேகரன்
சஜீவன்
நிலானி } மக்கள்

சுரேந்திரன் - அறியாமை

<u>பின்னரங்கில்</u>

இசை - பிரசன்னா, லிபிராஜ்
பாடகர்கள் - சுகிர்தினி, பிரமிலா, மோகனா, கௌரி, இந்துஜா
தபேலா - சதீஸ்வரன்

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) கடந்த 21.03.2014 அன்று 6.00 மணியளவில் நடைபெற்ற அரச நாடக விழா-விருது வழங்கல் விழாவில் நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த மெ. கேதீஸ்வரன் எழுதி நெறியாள்கை செய்த "சவப்பெட்டி" எனும் குறுநாடகம் முதலாமிடம் பெற்றது. இது மொத்தமாக ஒன்பது விருதுகளைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அவையாவன பின்வருமாறு.



**1. மெ. கேதீஸ்வரன் - சிறந்த நாடகம் (முதலாமிடம்)**
**2. மெ. கேதீஸ்வரன் - ஆண்டிற்கான சிறந்த பிரதி**
**3. வி. சுதர்சன் - சிறந்த நடிகர் (ஆண்) 2ம் இடம்**
**4. ச. நிலானி - சிறந்த நடிகை (பெண்) 2ம் இடம்**
**5. மெ. கேதீஸ்வரன் - சிறந்த மேடை அலங்காரம்**
**6. த. அமல்ராஜ் - சிறந்த ஆடையலங்காரம்**
**7. வ. நிருஷாந் - சிறந்த ஒப்பனை**
**8. செ. ரஜீவ் - சிறந்த ஒளியமைப்பு**
**9. மெ. கேதீஸ்வரன் - சிறந்த நாடக கலை வடிவம் (சிறப்புவிருது)**

**மெ.கேதீஸ்வரன்**

# GENTS CORNER

*Best Choice For Gents*

15, TRINCO ROAD, BATTICALOA. MOB 077 3329183




**தரமான விலையில் ஆடைகளைப் பெற்றுக்கொள்ள**
**நாடவேண்டிய ஒரே இடம்......**

**15, TRINCO ROAD, BATTICALOA. MOB - 0773329183**

# நல்ல சினிமா

**ஜே.சி. டானியல்**

அண்மையில் திரைக்கு வந்து ஆரவாரம் செய்து கொண்டிருக்கும் மிகப்பெரிய கதாநாயகர்களின் திரைப்படங்களின் மத்தியில் அமைதியாக திரைக்கு வந்த அருமையான திரைக்காவியம் தான் இந்த **ஜே.சி. டானியல்** ஒருவன் புதிய ஒரு கலைப் படைப்பை கண்டுபிடிக்கின்றபோது அல்லது படைக்கின்றபோது அதற்கான இடம் / உரிமை கொடுக்கப்டாமல் மறைக்கப்படுவது மறக்கமுடியாத வலியும் மறுக்கமுடியாத குற்றமுமாகும் அந்தவகையில் மலையாள சினிமாவின் ஆரம்ப கர்த்தாவான **ஜே.சி. டானியலின்** மறைக்கப்பட்ட சினிமா வாழ்க்கையினை ஆழமாக விளக்கும் புத்தகம் இந்த சினிமா கட்டாயம் இத்திரைப்படத்தினை பார்க்க வேண்டும். ஏனென்றால் நம்மத்தியில் உள்ள கலைஞர்களை நினைத்துப் பார்ப்பதற்காக வாவது? அப்பொழுது தெரியும் நம்மத்தியில் எத்தனை டானியல் இருக்கின்றார்கள் என்று??

**கி. திருச்செந்தூரன்**


# New Jamiah Press

Quality & Quick Printing Solution


Main Sreet, Kattankudy - 03. TP: 065 2246481, 077 4144833.
e-mail: newjamiah@gmail.com

**Our Professional Gifts**



**Offset Printing, Digital Printing, T-Shirt Printing, Mug Printing, Plate Printing, Rock (Grinite), Bottle Printing, Crystal 3D Printing, Screen Printing**

# பண்பாடும், பாரம்பரியமும்



பண்பாடு என்பது சமூகத்தின் வாழ்க்கை முறையாகும். ஆதிகாலம் தொடங்கி இன்றுவரை மாற்றம் ஒன்றே மாறாதது என்பதற்கிணங்க எமது பண்பாடும் வரலாற்று ரீதியாக மாற்றங்களை உள்வாங்கி வந்துள்ளது. காலனித்துவம் காரணமாக எமது பண்பாடுகள் சிதைக்கப்பட்டுப் புதிய பண்பாட்டுச் சூழலுக்கு எம்மை ஆளாக்கியுள்ளதுடன் எந்திரத்தனமான, தனித்தியங்கும், தங்கி வாழ்வோர் என்ற நிலைக்கு எம்மை ஆளாக்கியுள்ளது. எமது மண்சார்ந்த பண்பாடு, பாரம்பரியம், பழக்கவழக்கங்கள் என்பது நாகரீகமற்றது, பழையது, தரங்குறைந்தது என எண்ணும் நிலைக்கு எம்மை நாமே உருவாக்கி எமது அழிவுக்கு நாமே வழி கோலுபவர்களாகக் காணப்படுகின்றோம்.

காலனித்துவமும் அதனால் கட்டவிழ்க்கப்பட்ட நவீனத்துவம் என்பதும் எமது சமூக பாரம்பரியத்தை, பண்பாட்டை உடைத்து சமூக மாற்றத்தை, பண்பாட்டு மாற்றத்தை உள்வாங்கியுள்ள சூழலில் நவீன மயப்பாட்டின் வேக அளவுக்கு பாரம்பரியப் பேணுகைக்கான உந்துதல்களை ஏற்படுத்துவது அவசியமானதாகும். இருப்பினும் பண்பாட்டை நவீன மயமாக்குவதில் ஆழமும், அகலமும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழலில் மக்கள் அரச தொழில் வாய்ப்பு, தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு, வியாபாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு போன்றவற்றில் ஆர்வம் காட்டுகின்றனர். இக் காலத்தில் கிராமப் புறங்களில் இருந்து நகரை நோக்கிய மக்களின் நகர்வும் குறிப்பிடத்தக்கது. எமது பண்பாட்டு அம்சங்களில் ஒன்றான பாரம்பரியமான தொழில் முயற்சிகளில் பெரும் தொகைப் பணத்தைச் செலவிட்டு அதன் மூலம் கிடைக்கும் வருமானத்திற்காக பல மாதங்கள் காத்திருக்கும் நிலைக்கு மாறாக எதுவித முதலீடும் இன்றி தங்களின் வாழ்வியல் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய நிலையுள்ளதையும், கௌரவம், அந்தஸ்து என்பன புதிய சூழலில் கிடைப்பதையும் மக்கள் உணர்கின்றனர்.

பாரம்பரிய தொழில் முயற்சிகளைப் பிழைப்பூதிய தொழிலாக அன்றி தமது வருவாயைப் பெருக்கி கொள்வதற்காக மேற்கொள்ளும் பல தொழில் முயற்சிகளில் ஒன்றாக கொள்ளும் நிலையும் இக் காலத்தில் ஏற்படுகின்றது. இத்தகைய சூழலில் ஏதோ ஒரு அரசியல் நோக்கத்திற்காக எம்மை அழிக்க நினைக்கும் சக்திகளுக்கு நாம் கரம் கொடுப்பவர்களாக, கரம்கொடுப்பதாக எமது பண்பாடு மாற்றப் பட்டுள்ளது. எமது பண்டைய சமூகம், பண்பாட்டின் மையமாகக் கொள்ளப்பட்டாலும் அச்சமூகமும் சாதியம், பெண் அடக்கு முறை போன்ற செயற்பாடுகளைக் கொண்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. புராண இதிகாசக்கதைகள் எல்லாம் ஏதோ ஒரு வகையில் சமூகத்தில் குறிப்பிட்ட கட்டுப்பாடுகளை வகுப்பதாக கட்டமைக்கப்பட்டுக் காணப்படுகின்றது. சமயமும் கால காலமாக கலாச்சாரம், பண்பாடு என கட்டுப்பாடுகளையே விதித்து வந்துள்ளது. பண்பாடு பற்றி நூகோ எனும் அறிஞர் குறிப்பிடுகையில் கலாச்சாரம் என்பது விதித்துக் கொள்ளும் கட்டுப்பாடு என்கிறார். தற்போதைய சூழலில் பழைய புராண இதிகாச கதைகள் கட்டுடைத்து கட்டவிழ்க்கப்படும் போதுதான் சமூகத்தில் புகுத்தி வைக்கப்பட்டுள்ளவை. மெய்ப்பிக்கப்பட்டு வந்த தவறான சிந்தனைகளைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

இன்று எமது மண்சார்ந்த எமது மூதாதையர் பின்பற்றிய பண்பாட்டை கதையாகவும், கல்வியாகவும், காட்சிப் பொருளாகவும் பார்க்கும் நிலைக்கு நாம் மாற்றப்பட்டுள்ளோம். என்பதைத் தாண்டி இவற்றின் தேவை என்ன? இத்தகைய பண்பாடு பாரம்பரியம் பற்றி நாம் நமது மண் சார்ந்த பண்பாடு பற்றி சிந்திக்காமல் இருப்போமானால் எமது எதிர்கால தலைமுறையினரின் நிலை என்ன? பண்பாட்டின் வேர்களுக்கு திரும்புங்கள் என கோசம் எழுப்பப்படும் தற்போதைய சூழலில் இது எவ்வளவு சாத்தியமாகும், உடனடியாக சாத்தியமாக்கலாமா? என்ற வினாக்கள் எம்முன் எழும்புகின்றது. இருப்பினும் எமது பண்பாடு எமது பாரம்பரியம் என்ற பெருமிதப் பேச்சுக்களைத் தாண்டி மண்சார்ந்த பண்பாடு பற்றி சிந்திப்பது எம்மை எமது அழிவில் இருந்து பாதுகாக்க நாம் எடுக்கும் முயற்சி என்றால் ஐயமில்லை.

**பரமானந்தம் ஸ்ரீவனசா**

விதைத்தவன் உறங்கினாலும் - விதை
ஒரு போதும் உறங்குவதில்லை
-பிடல் காஸ்ரோ-

# எனக்காய் நீ....

காலம் எல்லாம் உன்னுடன்
வாழ்ந்ததாலோ என்னவோ
உன் அழகை ரசிக்க முடியவில்லை
ஆறுதலாய் என் கைகள்
உன் மீது படுகையில்
ஆதரிக்கிறேன் என நீ
நினைக்கிறாய்

என் வயிற்றுக் கஞ்சிக்காய்
உன்னை கிள்ளி விடுகிறேன்
நீயோ என் மீது
கோபம் கொள்ளாமல்
அள்ளித் தருகிறாய்
இருப்பினும் உனக்கு ஊதியமாய்
என் வியர்வையையும், இரத்தத்தையும்
சிந்துகிறேன்.



கனவுகள் ஆயிரம் ஆயிரம்
நினைவுகள் மட்டும் உன்னில்
முதுகில் தொங்கிடும் கூடை
என் மன சுமையையும் சுமக்கிறது.
மழை வெயில் குளிர் இன்னும்
பல இடர்களிலும் உன்னை
நாடுகிறேன்
ஏனோ கண்கள் மட்டும்
கசிகிறது நாளைய விடியலுக்காய்.......

சு.கார்த்தி

# சிலப்பதிகாரத்தில் ஆடல் செய்திகள்



பழந்தமிழ் கலாசாரம், சமயம், கலைகள், நாகரீகம் இவற்றை வெளிப்படுத்துகின்றன. மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் ஆறாம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியே சங்கமருவிய காலமாகும். இக்காலத்தில் பல்வேறுபட்ட இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. அவையாவன பதினெண் கீழ்க்கணக்கு இலக்கியங்களும் காப்பியங்களும் தோன்றின. அக்காலத்தில் தோன்றிய காப்பியமாக சிலப்பதிகாரத்தைக் குறிப்பிடலாம். இவ்விலக்கியம் 2ம் நூற்றாண்டில் இளங்கோவடிகளால் எழுதப்பட்டது. இவ்விலக்கியத்தில் நடனத்தின் செல்வாக்கு காணப்படுகிறது. அவற்றை விரிவாக நோக்குவோம்.

இவ்விலக்கியத்தில் நடனத்தைப் பலவகையாகப் பிரித்துள்ளனர். இதில் அகக்கூத்து, புறக்கூத்து முக்கியமானவை. அகக்கூத்து உணர்ச்சியமானது. புறக்கூத்து வேதியல் அரசர்களுக்கும், பொதுவியல் மக்களுக்குமென ஆடப்பட்ட நடனங்களாகும்.

இவ்விலக்கியத்தில் வரும் கதாநாயகியில் ஒருவரான மாதவி நடன மாதுவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவள் அப்ஸர ஸ்த்ரீயான ஊர்வசியின் பரம்பரையில் வந்தவளாகவும், நாட்டிய கலைக்குப் பெயர்போனவளாகவும் கூறப்படுகிறது. இவள் 12 வயதில் இக்கலையில் நிபுணத்துவம் பெற்றாள். இவளின் நடனத்தில் தேசிய, மார்க்க என்ற இரு மரபுகள் காணப்பட்டன.

இவள் புல்லாங்குழல், வீணை ஆகியவற்றின் பிரயோகத்தையும் அறிந்திருந்தாள், மாதவியின் பதினொரு வகை ஆடல்களாவன அல்லியம், கொடுகட்டி, குடக்கூத்து, குடைக்கூத்து, பாண்டரங்கம், மற்கூத்து, துடிக்கூத்து, பேடிக்கூத்து, மரக்கால்கூத்து, பாவைக்கூத்து, கடையம் என்பனவாகும்.

அல்லியம் என்பது கம்சன் யானை உருவெடுத்து வந்த போது கிருஸ்ணர் அவனுடைய கொம்பினை ஒடித்து ஆடியது. இது நின்று ஆடல் வகுப்பைச் சார்ந்தது. பெண்களை கொண்ட குழு வட்டமாக சுற்றி அன்பு வீரம் ஆகியவற்றைப் பாடி ஆடுவர்.

கொடுகட்டி இதில் முக்கியமாக அவதானிக்கபட வேண்டியது இடப்பக்க அசைவு இல்லாமல் வலப்பக்க அசைவுமட்டுமே காணப்படுவது. இக் கூத்தினை "கூத்தை சாக்கியன்" அர்த்தநாதீஸ்வரர் வடிவில் ஆடினான் என இளங்கோவடிகள் பின்வரும் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

"திருநிலைச் சேவடி சிலம்புவாய் புலம்பவும்......

உமையவள் ஒரு திறனாக அமையவள் ஆடிய கொட்டிசேதம்" எனக் குறிப்பிட்டார்.

பாணசுரனால் சிறைப்பிடிக்கப்பட்ட தன் மகனை மீட்பதற்காக மன்மதன் மண்ணாலும், செம்பாலும் எலும்பாலும் செய்யப்பட்ட குடத்தை தலையின் மேல் வைத்து ஆடிய நடனம். ஒன்றையோ அல்லது பல குடங்களையோ தலையில் தாங்கிய வண்ணம் மத்தள வாசிப்பிற்கேற்ப ஆடுவர். இதுவே குடக் கூத்து ஆகும். குடைக் கூத்து என்பது அவுணர் போரில் தோற்று ஓட முருகன் தன் ஒற்றைக் குடையை விரித்து ஆடியது. அசுரரோடு நடத்திய போரில் முருகன் தன்னைக் காக்க குடையின் கீழ் இந்நடனத்தை ஆடினார் என சிலப்பதிகார உரையாசிரியர் கூறுகிறார்.

மற்கூத்து என்பது மாயோன் மல்லனாகி அவுணரை கொன்று ஆடிய நடனம் ஹம்ஸவதத்தின் போது கிருஸ்ணனும் பலராமனும் மல்லர்களுடன் மல்யுத்தம் செய்ததை இது குறிக்கின்றது.

பாண்டரங்கம் என்பது அவுணர்கள் எரியுண்ட சுடுகாட்டில் நான்முகன் காணும்படி சுடலைப் பொடிபூசி, கம்சன் யானை உருவில் போரிடவர கிருஸ்ணன் அவன் கொம்பை முறித்தாடியது. இந்நடனம் தனி ஒருவரால் அதிகமான முக ஒப்பனையுடன் வைரவராக வேடம் தரித்து உடல் முழுவதும் சாம்பல் பூசியவாறு ஆடிய ஆட்டமாகும். சிவபெருமானுடைய மயானத்தில் மிக உக்கிரமாகவும் பயங்கரமாகவும் நடனமாடினார். இதில் பிரம்மா சாரதியாக வேடம் பூண்டு ஆட தேவர்கள் ஆச்சரியத்துடன் இந் நடனத்தைப் பார்த்தனர்.

துடிக்கூத்து முருகன் கடலிடை எதிர்த்த சூரனை வென்று உடுக்கு அடித்தவாறு ஆடியது. பேடிக்கூத்து ஆண்மைத் தன்மை திரிந்த பெண்கோலத்தோடு காமன் ஆடியது. மரக்கால் கூத்து பாம்பும் தேளுமாய் உருக்கோண்டு வந்த அவுணரை துர்க்கை மரக்காலால் விளங்கி ஆடிய கூத்தாகும். பாவைக்கூத்து அவுணர் மயங்குமாறு திருமால் ஆடிய நடனம் பாவைக் கூத்தாகும். கடையக் கூத்து என்பது வாணாபுரத்து வடக்குவாசலில் இந்திராணி கடைச்சியர் வேடம் பூண்டு ஆடிய கூத்தாகும். இவை அனைத்தையும் மாதவி ஆடினாள் என சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக் காப்பியத்தில் ஆச்சியர்குரவை, குன்றக்குரவை, வரிக்கூத்து, வெறியாடல் என்னும் கூத்துக்களும் கூறப்படுள்ளன. அரங்கேற்றுக் காதையில் தமிழ் இசைக்கருவிகள் பற்றிய சிறந்த விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏழுபாலை ஸ்வரங்கள் மற்றும் இசைக் கருவிகளாகிய மிருதங்கம், யாழ், புல்லாங்குழல், வீணை என்பன விவரமாக வர்ணிக்கப்பட்டுள்ளன. இதனை பின்வரும் பாடல் விளக்குகிறது

"குழல் விழி நின்றது யாழே யாழ்வழித்....
.......கூடிநின்று இசைத்தது ஆமந்திரிகை"

அரங்க இலட்ஷணம் பற்றியும் விரிவாக கூறுகிறது. அரங்கின் நீளம் எட்டு கோலாகவும், அகலம் ஏழு கோலாகவும், உயரம் ஒரு கோலாகவும் கூறப்பட்டுள்ளது. மேடை நான்கு கோல் அகல முடையதாகவும் கூறப்பட்டுள்ளது. அரங்கிலே இரன்டு நுழைவாயில்களிலும் பரதத்தினுடைய ஒவியம் வரையப்பட்டு வணக்கத்திற்காக அங்கே வைக்கப்பட்டிருந்தது. விளக்குகள் ஏற்றப்பட்ட தூண்களின் நிழல் மேடையில் விழாதவாறு வைக்கப் பட்டிருந்தன. அலங்கரித்து ஒவியம் தீட்டப்பட்ட மேற்தட்டு ஒன்றிலிருந்து மலர்ச்சரங்கள் தொங்கவிடப்பட்டன.

"தலைக்கோல்" வணக்கம் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு நடனமாது முதன் முதலில் அரங்கேறி ஆடும் மேடைக்குத் "தலைக்கோல் தானம்" என்று பெயர். பொதிகை மலை போன்ற புண்ணிய சாரல்களிலே வளரும் மூங்கில்களினால் இக்கோல் செய்யப்பட்டு கணுவுக்குக் கணு ஒரு சாண் இடைவெளி உடையதாக இருக்கும். பொன்தகட்டினால் போர்த்தப்பட்டு நவரத்தினங்கள் இழைக்கப்பட்டது. இக்கோலை இந்திரமகன் ஜயந்தனாகக் கருதி ஆவாஹனம் செய்து புண்ணிய நீரால் நீராட்டி மலரால் அலங்கரித்துப் பட்டத்து யானையிடம் கொடுப்பர். ஊர்வலம் வந்தபின் தலைக்கோலை அரங்கிலே எதிர்முகமாக வைத்துப் பூசித்து நாட்டியம் ஆடத்தொடங்குவர். இவ்வாறு அரங்கேற்றம் செய்து முடிக்கும் ஆடல் மகளுக்கு "தலைக் கோலரிவை" பட்டம் வழங்கப்படும்.

சிலப்பதிகாரத்தில் வஞ்சிக்காண்டத்தின் கதை தழுவிய கூத்தாக சாக்கியர் கூத்து மாற்றமடைந்து கேரளத்தின் செல்வமாக பொலிவுற்றது. இதில் நடன அமைப்பு, பக்கவாத்தியம், ஒழுங்கமைப்பு, அரங்கம் என்பன பற்றிக் கூறப்பட்டுள்ளது. அரங்கம் குற்றமற்ற தூய்மையான இடத்தில் அமைய வேண்டும். அரங்கிற்கு திரை உண்டு அவை ஒருமுகஎழினி, பொருமுகஎழினி, கரந்துவரல்எழினி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நடனத்திற்கு ஏற்றவாறு பல இசை வாத்தியங்கள் அரங்கேற்றுக் காதையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரங்கேற்று காதையின் கதாநாயகி மாதவி "வலக்கால் முன்மிதித்து ஏறி அரங்கத்து" என்று ஆடல்மகள் ஆடும் பாணியை வர்ணித்துள்ளார். நடனமானது அரங்கில் தோன்றும் போது வலக்காலை முதலில்வைத்து அரங்கில் ஏறுவர் என்பது தெளிவு. இதன்படி இக் காலத்தில் நடனம் உயர்ந்தது வளர்ந்தது என்பது தெளிவாகிறது.

இவற்றின் மூலம் நாம் பரதக்கலை முற்பட்ட காலங்களில் அடைந்த வளர்ச்சியை அறியமுடிகிறது.

**அருந்தஷா செல்வலிங்கம்**

மனம் திறந்து பேசுங்கள் - ஆனால் மனதில்
பட்டதெல்லாம் - பேசாதீர்கள்
சிலர் புரிந்து கொள்வார்கள்...
சிலர் பிரிந்து செல்வார்கள்...


NEW GADABY REST INN
REAL ASIAN
VEG & NON VEG
FAMILY RESTRURENT
Friday Spacial
Mutton Thum Buriyani
Beef Thum Buriyani
NEW GADABY REST INN
No: 250, 252, Main Street,
Kattankudy - 1
T.P : 065 2245611, 077 7797409

# நானே எனது மக்கள்

கவியைக் கவிதையாய்
கவிவம்சக் கவியாகிய நான்
கவியைத் தெழிக்க கவியரங்கின் முன்



தாய் அன்னை என்னை ஈன்ற நேரத்தில்
தமிழோடு நான் புரண்ட வேகத்தில்
என் மொழி என்னோடு சேர்ந்த காலத்தில்
உரிமைக்காகப் போராடும் தாகத்தில்

இந்நாட்டில் பிறந்த பாவத்தில்
என் உறவில் பல நூறு தாரத்தில்
-ஏற்பட்ட கோரத்தில்
என் மக்கள் இன்று இல்லாத கோபத்தில்

என் உடலில் ஒரு சில பாகத்தில்
கசிந்தது கண்ணீர்... - என் விழி ஓரத்தில்
வியந்தேன் நாமும் அனுபவிக்கும் சாபத்தில்
காரிருளும் விடியும் ஒரு சில மாதத்தில்



"வேங்கை" சுலஷ் (Sulux)
மட்டக்களப்பு

# மீரா ஒரு கேள்விக்குறி?

சிறு கதை



பழைய முகங்களின் கண்களில் ஏதோவொன்று கிடைத்தது போல பூரிப்பு. புது முகங்களின் கண்களில் ஏதோவொன்றை பறிகொடுத்தது போல வாட்டம் அவர்களைக் காப்பாற்றுவதற்காக நோட்டமிடும் வயதான வௌவால்கள். இந்த நேர்கோட்டுப் பாதையில் தனது பல்கலைக் கழகத்திற்குள் காலடியெடுத்து வைக்கிறான் கண்ணன் அவனுடன் வெள்ளைப் புறாக் கூட்டங்கள் போல பயந்து பதறியழுத மாணவர் பட்டாளம். ஆரம்பமே அமர்க்களமாய் "ராக்கிங்" என்ற புனைப்பெயருடன் நெருங்க ஆரம்பித்த நெஞ்சங்கள் மனதை வாட்டியதும் உண்டு. சிலரின் துயர் கண்டு நெஞ்சம் நெகிழ்ந்தவர்களும் உண்டு. இவன் நுண்கலைப் பீட மாணவன். நாடகம் எனும் பாடத்தை விரும்பி எடுத்தவன். இவனும் எல்லா மாணவர்களையும் போல் சீனியருக்கு மரியாதை கொடுத்து அவர்களிடம் சில அடிகளையும் வாங்கினான். வந்தவுடனே பல்கலைக்கழக வாழ்க்கை வெறுத்தது. ஆனால் மறுபுறம் ஆறுதல் சொல்வதெற்கென ஒரு பட்டாளம்.

இவ்வாறான ஒரு காலகட்டத்தில் கண்ணனின் அப்பா இறந்து விட்டார் என்ற செய்தி வருகிறது. பட்டம் பெற்று வருவான் என் மகன் என்று இருந்தவர் பாரினை அடைந்து விட்டார். அவனின் நண்பர்களும் அவனுடைய ஊரைச் சேர்ந்தவர்களும் அவனுடைய இல்லத்திற்கு கடைசி வரை இருந்து உதவிகளைச் செய்தனர். அவனுக்கு தோளுக்கு தோழனாய் இருந்தார்கள்.

இப்படியான கட்டத்தில் அவனுக்கு மீரா எனும் பெண்ணுடன் நட்பு உருவாகிறது. இவ்வளவிற்கும் மேலாக மீரா அவனது ஊரைச் சேர்ந்தவள். அப்போதெல்லாம் வராத ஓர் உணர்வு மரண வீட்டில் வந்து குடி கொள்கிறது. அன்று அத்திவாரம் போடத் தொடங்கிய நட்பு ஆலமரமாய் பரந்து வளர்ந்தது.

கண்ணன் தன் காரியம் முடித்து வருகிறான். அவர்களிற்கான ராக்கிங் பங்சன் முடிகிறது. அன்றைய தினம் அவளைக் கண்டு கொள்கிறான். அவனைப் பார்த்து மீரா உனக்கென்று உன் அம்மா, தம்பி, தங்கை இருக்கிறார்கள். அவர்களை வழி நடத்த வேண்டியவனாய் நீ இருக்கிறாய். உன் உயிர்த் தோழி என்ற வகையில் நான் இதை கூறுகிறேன் உன்னுடைய படிப்பு பத்திரம் கண்ணா என்று கூறிச் செல்கிறாள்.

இவ்வாறு முளைவிடத் தொடங்கிய அவர்களது நட்பு. அவள் அவனது குடும்பத்தை பற்றி பலதடவைகள் ஒரு நாளைக்கு விசாரிப்பாள். இவனும் அவளைப் பற்றித் தினமும் கேட்பான். கண்ணனின் மனதில் அம்மா, தம்பி, தங்கை பற்றிய சிந்தனையே ஓடியது.

தினமும் தந்தை படத்தை பார்த்து விட்டுதான் பல்கலைக்கழகம் செல்வான். அங்கு சென்றால் அவனுக்கு ஆறுதல் வழங்குபவளாக மீரா இருப்பாள். ஆனால் அவளோ இசைத்துறை மாணவி, பாடங்கள் இல்லாத நேரத்தில் புளியமரம் தான் வகுப்பறை. மீராவின் அளவுகடந்த பாசம் கண்ணனுக்கு விளங்கியது. கண்ணாடி முன்னால் போய் எப்போதும் இல்லாத ஒரு உணர்வு இப்போது மட்டும் தொடுவதேனோ, இலட்சியங்கள் இருக்கின்றது இது வரைக்கு என்னை தீண்டாதிரு என கண்ணாடியுடன் சண்டையிட்டான்.

மறுநாளும் அதே எண்ணம் அவனை வட்டமிட்டது. மீராவை அவனுக்குப் பிடித்துவிட்டது. ஆனால் காதலுமில்லை, காமமுமில்லை, ஏதோ இனம்புரியாத உணர்வு. மீரா ஒருநாள் கண்ணனுடைய ஆடைகளை பிடித்து பார்த்து நீ ரொம்ப மெலிந்து விட்டாய் என்றாள். அவனுடைய முகம் வியர்த்து மழைத்துளியில் குளித்தவனைப் போல அவனது ஆடை நனைந்து விட்டது. விறு விறு என வகுப்புக்கு நேரமாகி விட்டதென்று நகர்ந்து சென்றான். மீராவும் ஒன்றும் புரியாதவளாக பழகுகிறாள். அவளுடைய மனதில் அவன் நண்பனாக மட்டுமே இருக்கிறான் என்பதும் ஆனால் கண்ணனுடைய மனமோ அலைபாய ஆரம்பித்து விட்டது. அவளைப் பற்றி தினமும் நினைத்துப் புழுவாய்த் துடித்தான்.

ஏன் அவள் மீது இனம்புரியாத ஆசை வந்தது? அவள் என்னுடைய நண்பி, அவளின் எண்ணத்திற்கு மதிப்பளிக்க வேண்டுமே தவிர அவளைத் துணைவியாக எண்ணக்கூடாதென தனக்குத்தானே புத்தி புகட்டினான். உறங்கும் வரை கண்களோடு பேசியிருந்து அவளை நண்பியாக மட்டுமே எண்ண வேண்டும் என உறங்கிய அவனுக்கு மறுநாள் சூரியன் பட சுயநிலை அற்றவனான பழைய பஞ்சாங்கத்தைப் பாட ஆரம்பித்து விட்டான்.

அவனுடைய நண்பர்களும் இவன் ரொம்பவே மாறிவிட்டான் எனக் கதைத்தனர். அவனுக்கு தான் என்ன செய்கிறேன் என தெரியாமல் புத்தியானது புரண்டு விட்டது. கன்னியின் கண் பார்த்து கதைத்த அவனது கண்கள் ஏதோ தடுமாற்றத்தை பரிசாய் அளித்தது. மீரா அவனுடைய நடத்தையை பார்த்து ஏன் இவன் மாறி விட்டான்? என மனதில் எண்ணினாள். அவனுடைய எண்ணத்திற்கு தான் தானே சிற்பம் என்பதை அறியாதிருந்தாள். ஆனால் கண்ணன் அவளின் போனுக்கு ஒரு காதலன் எப்படி காதலிக்கு sms போடுவானோ அதே மாதிரி அனுப்பினான்.

அவளும் அதற்கு பதில் sms அனுப்புவாள். கண்ணன் தன்னுடைய எண்ணங்களை அவள் புரிந்து கொள்வாள் அவளுடைய மனதிலும் நான் இருக்கிறேன். நாளை போய் அவளிடமே முடிவை கேட்டுவிடுவோம். என் மனதின் பாரத்திற்கு விடைகிடைக்கும் ஆனந்தம் ஒரு பக்கமிருந்தாலும் மறுபுறம் சின்ன ஏக்கம் அவன் மனதில் குடி கொள்கிறது. இறுதி யுத்தம் போல...

புளியமரப் பூக்கள் அவனுக்கு மாலை தூவின. மீராவும் ஏதோவொன்றைச் சிந்தித்த வண்ணம் வந்திருந்தாள். இவனுக்கு எப்படி சொல்வதென தெரியாமல் வாயில் வந்தபடி உரையாற்ற ஆரம்பித்தான். இவனின் கோமாளித்தனத்தை பார்த்து அவளின் மனம் நெகிழ்ந்தது. 'ஏன் இப்படிச் செய்கிறாய் கண்ணா! சொல்ல வந்ததை சொல்லுடா என்றாள். அவனும் தயக்கத்துடன் என்னை எவ்வளவு பிடிக்கும் சொல் என்றான். அதற்கு மீரா ஏனடா திடீரென இப்படி கேட்கிறாய்? என்றாள். நீ கேட்க வந்ததை நேரே கேள் என்றாள். அதற்கு கண்ணன் நான் ஒன்று கேட்பேன் அதைக் கேட்டு நீ கோபப்படக் கூடாது. இந்த வார்த்தை நமது நட்பைப் பாதிக்காது என உணர்கிறேன் கேட்கலாமா? என்றவுடன் அவளது முகம் இருண்டது. நண்பன் நயவஞ்சகனாக மாறிவிட்டான் என்பதை உணர்ந்தாள்.

ஆனால் உள்ளம் கறைபடிந்த வார்த்தைகளால் அழுகிறது. மீரா! உன்னுடைய அன்பு என்னை நண்பன் என்ற வட்டத்திற்கு மேலே கொண்டு சென்று விட்டது. நீ காட்டிய அன்பு எனக்கு என் உடல் கல்லறை செல்லும் வரை வேண்டும். எனக்கு உன் அன்பை தருவாயா? நான் கேட்பதும் தவறு என தெரிந்தும் அதை புரிந்து கொள்ளும் பக்குவம் எனக்கு இல்லை. தயவு செய்து என்னை ஏற்றுக்கொள். என்னை வெறுத்துவிடாதே. நான் உன்னை விரும்ப ஆரம்பித்து ஒரு இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து அறுநூறு நிமிடங்கள் ஆகிவிட்டது. மீரா நீ மட்டும் எனக்குக் கிடைத்து விட்டால் என் வாழ்க்கையின் பிறவிப் பயனை அடைந்து விடுவேன். உன் பதிலை கூறு என்கிறான். திகைத்துப்போன அவளது உள்ளம் ஊமையாகியது. அவளது கண்களில் நீர் மட்டுமே அருவியாகப் பாய்ந்தது. கண்ணா! எனது அன்பு உன்னை காயப்படுத்தியதற்கு நான் மன்னிப்புக் கேட்கிறேன். நீ நினைப்பது போல நானில்லை. என் மனதில் கரன் என்பவர் இருக்கிறார். அவரை ஐந்து வருடங்களாகக் காதலிக்கிறேன். என்னை கரம்பிடிப்பதற்காக கனடாவில் அகதியாய் இருக்கிறார். நீ எனக்கு நல்ல நண்பன் மட்டும் தான் அதை தவிர என்மனதில் வேறொன்றுமில்லை. இன்றுடன் அதுவும் கலைந்து விட்டது. நான் வருகிறேன் வழியை விடு என்று அவள் செல்ல, மீரா..! என் உடல் புதைகுழியில் புதைவதுதான் உனக்கு ஆசை என்றால் நகர்ந்து செல் என்று கூறிய அவனுக்கு வார்த்தைகள் மட்டுமே எஞ்சியது அவ்விடத்தில் உடல் தளர்ந்து கீழே விழுந்தான்.

போயும் போயும் நெஞ்சமே கல்லாய்ப்போன ஒருத்தியின் நெற்றியிலா குங்குமம் இடப்போனாய்? உனக்காக உன் உறவுகள் சிந்தும் இரத்தத்திற்குப் பதிலைத் தருவதற்கு முன் உன் துணையை நாட நினைத்தாயே..? நீ செய்வது சரியா..? என அவனது உள்ளம் அவனிடமே கேள்விகளைக் கேட்டது. அவளுடைய மனதில் ஒருவன் இருக்கிறான் என தெரிந்தும் அவனுடைய மனம் அவளை விட்டு பிரிய துளியளவுகூட துணியவில்லை. மறுநாளாகியும் பல்கலைக்கழக வளாகத்தை விட்டு நகராமல் அந்தப் பனியிடையே அவளை பற்றி நினைத்துக் கொண்டிருந்தான்.

மறுநாள் அவனுடைய நண்பர்கள் வந்து இரவு எங்கையடா போனனீ? எனக் கேட்டனர். அப்போது மாணவர்களோடு மாணவியாக மீராவும் முகத்தில் வாட்டத்துடன் வந்தாள். கடைக்கண்ணால் அவனைப் பார்த்துவிட்டு செல்கிறாள். ஏனடா இவனுக்கு என்ன கிறுக்கா பிடித்திருக்கு நண்பர்கள் பேசுவது ஒன்றும் அவனுக்கு கேட்கவில்லை.

அவளையே பார்த்துக் கொண்டிருக்கிறான். கண்ணன் மீராவை பார்த்துக் கொண்டே "மச்சான் தேள் கடிச்சிற்று அது தான் இங்கேயே இருந்திட்டேன்" என்றான். மீரா கண்களை துடைத்த வண்ணம் என்னைத்தான் கூறுகிறான் என நகர்கிறாள்.

இரண்டு மூன்று நாட்கள் கழிந்தன. பிரிவுப்பாலத்தின் இடைவெளி அதிகரித்தது. என் இன்ப துன்பத்தில் துணையாக இருப்பாள் என நம்பினேனே... அவளோ என்னை வேண்டாம் என்ற பிறகு இன்னும் என்னை உணராமல் இருப்பது எட்டாக்கனிக்கு ஏங்குபவரின் வாழ்க்கையைத் தான் காட்டுகிறது. தனக்குத்தானே வைத்தியம் செய்கிறான். தன்னுடைய தாய், தம்பி, தங்கையினரை மனதில் எண்ணியவாறு அவர்களை மறந்ததற்கு இறைவன் கொடுத்த பரிசு என எண்ணி வாடினான். மறு நாள் மடல் ஒன்றை மீராவுக்கு கொடுக்கும் படி அவளது நண்பியிடம் கொடுத்துவிட்டு நகர்கிறான். அதிலே "கனடா செல்கிறேன் உன் கனவுகளும் கனவுலகமும் மட்டுமே எனக்குப் போதும்" என்ற வாக்கியம் மட்டுமே சித்திரமாக பொறிக்கப் பட்டிருந்தது. ஊமையாக இருந்த உன்னை ஒரு நல்ல மனிதனாய் மாற்றுவதற்கும், உன் குடும்பத்தை எண்ணியும் தானே உன்னை எனக்கு பிடிக்கவில்லை என நடித்தேன். வெளிப்பார்வைக்கு உன்னை வெறுப்பது போல இருந்தாலும் உன்னைத் தானடா நினைத்தேன். பொய்யான வார்த்தையை கூறியாவது நீ உன்னுடைய படிப்பில் கவனம் செலுத்துவாய் என்று இருந்தேன். இப்படி நட்டாற்றில விட்டுச் சென்றாயே..... என்று பூவின் கண்ணில் இருந்து கண்ணீர் சொட்டுகிறது. கையளவில் இருந்தவனைக் கடலிலே அனுப்பிவிட்டேனே... என்றும் அவனுடைய இந்த நிலைக்கு நான் தான் காரணம் என்றும் புலம்பினாள். அப்போது தான் அவளுடைய நண்பிக்கு இவள் அவனைக் காதலிக்கிறாள் என்பது புரிந்தது. ஆனால் கண்ணனே அவள் நினைப்பைத் தொலைத்தவனாகப் புறப்படுகிறான். அவனிடம் காதல் மழை தூவிய நேரம் அவளிடமும் தூவியது அப்போது அதை மறுக்க மட்டுமே செய்தாள்.

ஆனால் பாவி இவனோ அவளையே நினைத்தவனாய் உறவுக்காக ஓடுகிறான். வாழ்கையே நாணயம் மாதிரித்தான் எப்போது எது விழும் என கூற முடியாது. சிரிப்பை தொலைத்தவளாக அவள் நகர்கிறாள். சிந்தனையை இழந்தவனாக கடலில் இவன் மிதக்கிறான். சுற்றுகிற பூமியில் அலைந்து திரியும் காதல் புறாக்களில் ஒரு திசை தெரியாது போகிறது. இன்னொன்று இங்கேயே ஏங்குகிறது. இவ்வாறான செயற்பாடுகளைப் பார்த்துப் பூமித்தாயானவள் புன்னகை மட்டுமே செய்கிறாள்.

காரணம் விதையாய் விதைக்கப்பட்ட உடல் புதைகுழியில்
சரணமாகாமல் பிரிவு என்னும் பாதை தானே பயணிக்கிறது
என்றுதான்............

**"பீனிட்ஸ்" விஜி**

கண்களைவிட கண்ணீருக்கு மதிப்பதிகம் - ஏன் என்றால்
கண்கள் உலகத்தைக்காட்டும் - கண்ணீர்
உள்ளத்தைக்காட்டும்...


கலைமகள் கல்வி நிலையம்
KALAIMAGAL EDUCATION CENTRE
Regd No : DS/MN/399/96 - 26-07-1996

Director
Mr. A. SATHIYASEELAN.

Address:
Main Road
Kallady, Batticaloa
Sri Lanka
Date .................

Board of member
01.Mr.Kpeethamparam
02. Mr .R.Mohan
03. Mr .T.Lohanayakam
04. Mr .S.Sasitharan

உயர்தரம் A/L

லொஜிக் - R.மோகன்
நாடகமும் அரங்கியலும் - S.பிரதீபன்
புவியியல் - K.பவா
இந்துநாகரிகம் - S.கமலநாதன்
தமிழ் - M.மேரா
அரசியல் - S.ரவி

சாதாரனதரம் O/L

கணிதம் - V.கிரி
தமிழ் - S.கமல்
விஞ்ஞானம் - S.ரஞ்சனி
வரலாறு - N.நவநீதன்
வணிகமும் கணக்கீடும் - K.கேதிஸ்

"தனியார் கல்வி சேவையில் 18 வருட அனுபவம்
மிக்க சிறந்த கல்வி நிலையம்"
T.P - 0771158773

மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்.........

# அழிப்பும் இழிப்பும்

நிறுத்து
மதி கெட்ட மானிடனே
நிறுத்தடா...!

இன்னும் உன்
ஆண்கடன் முடியவில்லையா...?
நரபலி வாஞ்சை வற்றவில்லையா....?

உன் உயிரைக் களவாட
நடந்த வதங்கள் போதாதா..?
இயற்கையின் தாண்டவம் போதாதா..?



உலக மகா யுத்தங்கள்...
சூறாவளிகள் ...
வெள்ளப்பெருக்கு...
சுனாமி...

அது மாத்திரமா...?
ஈழத்து யுத்த களரி...!

இன்னும்
எவ் வழியைத் தேடுகிறாய்
நீ உன்னை அழிக்க..!


நித்தமும் சிந்தி
நிகழ்வதைத் தடுக்க
ஓ.....எப்படிச் சிந்திப்பாய்...?



படித்தவன் நீ
உன் புத்தியை
பணத்திற்கு விற்றால்..!

கல்விக் கூடங்கள்
கழுதை வாழும் இடமாக மாறினால்..!
மறவனே....!

உன் வீரத்தாய்
ஈன்றெடுத்தது எதற்காக...?
மண்டையை மடுவாக்கி
மூளையை ஈடு வைக்கவா?
அல்லது



குண்டியைச் சுருக்கி
குளிர் சாதனப் பெட்டிக்குள்
குளிர் காயவா...?

ஈண்டவளை விலத்தி
இணைந்தவளை நசுக்கி
பாவையர் பாதகச் சீர்வரிசை வாங்காமல்

அவன் இவனைப் புறத்தி
நீ உன்னை உயர்த்தி
அலப்புதல் பண்ணாமல்



அடுநறா பருகி
ஆசைக்கிழத்தியோடு
கலவியில் களித்துயில் கொள்ளாமல்


புரவி போல் தாவி
புலி போல் பதுங்கி
புதனில் ஏறி
பூவிக்கோளத்தைக் கவனி...!

அறிவாய் நீயும்
எப்படி வாழ்ந்தாய்...!
வாழ்கின்றாய்...!
வாழப்போகிறாய்...!
என்பதை....!

- திரு -

தன்னை அறிந்தவன்
ஆசைப்படமாட்டான் - உலகை
அறிந்தவன் கோபப்படமாட்டான் - இந்த
இரண்டையும் உணர்ந்தவன் துன்பப்படமாட்டான்

# 1990 களுக்குப் பின் மட்டக்களப்பில் நாடக வளர்சியானது தன்னகத்தே ஒரு வேகத்தைப் பெறுகின்றது.




தொண்ணூறுகளில் ஈழத்து நாடகப்போக்கில் தமிழர் பிரதேசத்தில் ஏற்பட்ட வளர்ச்சிகள் முக்கியமானவை. அதிலும் குறிப்பாக மட்டக்களப்புப் பிரதேசத்தில் தொண்ணூறுக்குப் பின் ஏற்பட்ட மாற்றங்கள் குறிப்பிடத்தக்கவை. மட்டக்களப்பிலே தொண்ணூறுக்குப் பின்னரே நாடகத்தின் வளர்ச்சி ஒரு உத்வேகத்தை பெறத் தொடங்குகின்றது. இது எவ்வாறு தனது ஊடாட்டத்தினை ஏற்படுத்தியது எனில் பாடசாலைகளின் ஊடாகவும், பல்கலைக் கழகங்களின் ஊடாகவும், பெண்கள் இயக்கங்களின் ஊடாகவுமே ஆகும். இவற்றின் மூலம் நாடகங்களும் அது சார் செயற்பாடுகளும் வளர்க்கப்பட்டதுடன், பிரதேச கலாமன்றங்களின் செயற்பாடுகளும், ஊடகங்கள் கலைக்குப் பணியாற்றிய கலைஞர்களை கௌரவிப்பதன் மூலமும், நாடக நூல்களை வெளியிட்டதன் மூலமும் மட்டக்களப்பு பிரதேச நாடகவளர்ச்சியானது மேலோங்கி காணப்பட்டது எனலாம்.

மட்டக்களப்பில் கிராமங்களில் மட்டுமே ஆடப்பட்டு வந்த பாரம்பரிய கூத்துக்கள் காலப்போக்கில் பாடசாலைகளில் மீண்டும் துளிர் விடுகின்றது. தமிழ்த்தினப்போட்டி, இலக்கியவிழா போன்ற நிகழ்ச்சிகளிற்கு பாடசாலைகளிலிருந்து கூத்தினை ஆற்றுகை செய்தனர். இக்கூத்துக்களைப் பயிற்ற சிறந்த அண்ணாவிமார்கள் பாடசாலைக்கு வரவழைக்கப்பட்டனர். மட்டக்களப்பிலுள்ள கலாசாரப்பேரவை கூத்தை ஆவணப்படுத்துவதில் அக்கறை செலுத்துகின்றது. மட்டக்களப்பில் சிறந்த அண்ணாவிமார்களென நல்லலிங்கம், கனகையா, பாலிப்போடி ஆகியோர் கௌரவிக் கப்பட்டனர்.

மேலும் மட்டக்களப்பில் 1992[ம்] நாடகமானது பல்கலைக்கழகத்தில் ஒரு பாடமானது .இதற்கு முன்னோடியாக விளங்கியவர் பேராசிரியர் சி.மௌனகுரு ஆவார். இவர் யாழ் பல்கலைக்கழகத்திலும் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் கல்வி நடவடிக்கைகளை முடித்துவிட்டு மட்டக்களப்பிலே தனது நாடக செயற்பாட்டினை முன்னெடுத்தார் இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பில் நாடகவளர்ச்சியானது மெது மெதுவாக வளர்ச்சியடைந்தது.

மட்டக்களப்பிலே நாடகமானது ஒரு உயர் நிலையை அடைவதற்கு பாடசாலை அரங்கு ஒரு படிக்கல்லாக இருந்தது எனலாம்.

பேராசிரியர் மௌனகுருவின் பங்கு முக்கியமானது. ஆசிரியர்களின் விருப்பு முயற்சி நடவடிக்கைகளை விடுத்து நடிப்பு, ஆட்டம், ஒளியமைப்பு, காட்சியமைப்பு, ஒப்பனை ஆகிய அரங்க மூலகங்களை பயன்படுத்தி பல நாடக செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதால் பாடசாலை நாடகங்கள் ஒரு காத்திர வடிவத்தைப் பெறுகின்றது. உதாரணமாக பேராசிரியர் மௌனகுருவினால் எழுதப்பட்ட "தப்பிவந்த தாடியாடு" நாடகம் சிறந்தொரு உதாரணமாகும். பல்கலைக் கழகத்தில் ஒரு பாடமாக காணப்பட்டமையை தொடர்ந்து உயர்தர மாணவர்களிற்கு ஒரு பாட நெறியாக்கப்பட்டது. நாடகத்தில் அக்கறையான மாணவர்கள் பலர் உள்ளார்கள். அவர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ள நாடகமும் அரங்கியலும் எனும் பாடமானது சிறந்த வழிகாட்டியாகும். நாடகம் பற்றிய விரிவான பரந்த பின்னணி அறிவை மாணவர்கள் பெற்றுக் கொண்டனர்.

மேலும் 90களில் மட்டக்களப்பில் பாடசாலைகள் பல்கலைக்கழகங்களின் மூலம் வளர்ச்சி நிலையைப் பெற்றுவந்த நாடக முன்னெடுப்பானது பெண்கள் அமைப்புகளினூடாக வளர்த் தெடுக்கப்படுகின்றது. பெண்கள் அமைப்பினூடாக நாடகங்கள் மேடையேறுவதற்கு மட்டக்களப்பில் பேராசிரியர் மௌனகுருவும் யாழ்ப்பாணத்தில் குழந்தை ம.சண்முகலிங்கமும் கவனம் செலுத்தியுள்ளார்.

அந்தவகையில் பெண்கள் அபிவிருத்தியை மையமாக கொண்டு மேம்படுத்தும் நோக்கில் பெண்கள் அபிவிருத்தி நிலையமாக மட்டக்களப்பில் இயங்கும் 'சூரியா பெண்கள் அமைப்பினூடாகவும்' மட்டக்களப்பிலே பல நாடக செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. சூரியா அபிவிருத்தி ஊடாக நாடக பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன.

சூரியாவினூடாக வெளிவந்த நாடகங்களாக 'பாரமுறி', 'மட்டு நகர் கண்ணகிகள்', 'நிசப்த இரைச்சல்' ஆகிய நாடகங்களைக் கூறலாம். ஏற்கனவே குறிப்பிட்டது போல 1992க்குப் பின்பு 'நாடகமும் அரங்கியலும்' கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஒரு பாடமாக உட்படுத்தப்படுகின்றது. இங்கு நுண்கலையும் கற்பிக்கப்படுகின்றது.

பாலசுகுமாரின் நாடகங்கள் அனைத்தும் உட்கொண்ட அரங்கத் (total theatre) தன்மையுடன் நிகழ்பவை. பாலசுகுமார் யாழ் நாடக இலக்கியங்களில் அடிப்படைப் பயிற்சிகளும் அனுபவமும் பெற்று, பின்னர் தமிழகத்தில் பேராசிரியர் இராமானுஜத்தின் பயிற்சிப்பட்ட றையிலும் பயிற்சி பெற்றவர். தமிழகத்தில் இராமானுஜம், ஆறுமுகம் ஆகியோரால் நெறியாள்கை செய்யப்பட்டு பாலசுகுமாரால் மேடை யேற்றபட்ட நாடகங்களாக 'கருஞ்சுழி' 'செம்பவளக்காளி' ஆகியவற்றை குறிப்பிடலாம். மேலும் இவரின் நாடகங்களாக 'ஆற்றைக்கடத்தல்', 'கொங்கைத்தீ' ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இவரைப் போலவே கிழக்குப்பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்த சி. ஜெயசங்கர் யதார்த்த நாடகங்களிலும் பாடசாலை நாடகங்களிலும் கவனம் செலுத்தினார்.

மரபுவழிக் கூத்துக்களின் சாரத்தை நவீன நாடகங்களில் பயன்படுத்தினார். இவர்களைத் தொடர்ந்து கிழக்குப் பல்கலைக் கழகத்தினூடாக வளர்ந்து நவீன நாடகப்பிரக்ஞையுடன் பாடசாலை களையும், உயர்கல்வி நிலையங்களையும் களமாக கொண்டு செயற்பட்டவர்களில் விமல்ராஜ், சீவரத்தினம், அன்பழகன், சுதாகரன், ரவிக்குமார், கௌரீஸ்வரன் ஆகியோரை குறிப்பிடலாம். எனவே 90களின் பின்னர் மட்டக்களப்பில் நாடகமானது பாடசாலைகளின் ஊடாகவும் அபிவிருத்தி நிலையங்கள் ஊடாகவும் வளர்த்தெடுக்கப் பட்டதுடன் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் ஏனையோராலும் வளர்த்தெடுக்கப் பட்டது எனலாம். இதன் பிரகாரம் நாடக வளர்ச்சியானது அதிவேக வளர்ச்சியை பெற்றது என்று கூறுவதில் ஐயமில்லை.

**ம. லாவண்யா**

தோல்வியை ஒப்புக்கொள்ள
தயங்காதே – தோல்வியிலிருந்து
கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது

லெனின்

**அன்பான வாசகர்களே.....**

**அடுத்த இதழிற்கான ஆக்கங்கள்
தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றது.
வாசகர்களாகிய நீங்களும்
உங்கள் ஆக்கங்களை எங்கள் "கலைக்கோபுர"ச்
சஞ்சிகைக்கு தந்து உதவுமாறு வேண்டி நிற்கின்றோம்.**

–இதழாசிரியர்–

# கல்வி அரங்கம்

## தரம் 9,10,11 மாணவர்களுக்கான பரீட்சைக்கான இலகுவழி வினாவிடை

1. ஜோர்ஜ் கீற் பிறந்த ஆண்டும் அவர் கல்விகற்ற பாடசாலையின் பெயரும் யாது?

   பிறந்த ஆண்டு 1901

   பாடசாலை கண்டி திரித்துவக் கல்லூரி

2. பத்து வயதில் சிலுவையில் யேசு எனும் ஓவியத்தை வரைந்தவர் யார்?

   ஜோர்ஜ்கீற்

3. இவர் இலங்கைக்குரிய தனித்துவமான ஓவியர் இவரின் ஓவியத்தில் மேலைத்தேய, கீழைத்தேய கலப்பு,பிக்கோசோவின் தாக்கம் தடித்த தெளிவான கோடுகளின் செல்வாக்கு போன்றவறைக் காணலாம். இவரின் பெயர்?

   ஜோர்ஜ்கீற்

4. ஜோர்ஜ் கீற்றின் பௌத்த மத சம்பந்தமான ஓவியத்தை எங்கு காணலாம்?

   கௌதமி விகாரை

5. இவர் வரைந்த முக்கிய ஓவியங்கள்?

   தேவாரதனை, மாயதேவியின்கனவு, புத்தரின் பிறப்பு, வில்வித்தை பழகுதல், யாசோதரை திருமணம், சிந்தனையில் ஆழ்தல், வயோதிபனைக் காணுதல், மனை, மகன், அரண்மணையைத் துறந்து வெளியேறுதல், குதிரையில் புறப்படுதல், துறவு பூணுதல், யமனை வெற்றி கொள்ளல், புத்தராதல், கிழபுல்வத்புரவிற்று வருகை, பரிநிர்வாணமடைதல்

6. களனி விகாரையில் ஓவியம் வரைந்த ஓவியரின் பெயர்?

   சோளியஸ் மென்டிஸ்

7. இவர் ஓவியம் வரைந்த விகாரைகள் 2 தருக?

   களனி விகாரை, உடுமத்தாவ விகாரை

8. நவீன பௌத்தக் கதையை புதிய வழியில் திருப்புவதற்கு காரணமான ஓவியர் யார்?

   சோளியஸ் மென்டிஸ்

9. சோளியஸ் மென்டிஸ் புதிய மண்டபத்தில் ஓவியம் வரைவதற்கு பயன்பட்ட வர்ணம் எப் பொருளினால் தயாரிக்கட்டப்பட்டது?

   இயற்கைப் பொருள்

10. இவர் வரைந்த முக்கிய ஓவியங்கள்?
வெள்ளரசு இலங்கை வருகை
ஹேமமாலா நந்தகுமாரன்
சங்கராஜா பதவி வழங்குதல்
விஜயன் இலங்கை
புத்தர் களனி விகாரையை தரிசித்தல்
11. 1929ல் கொத்தலாவ என்னுமிடத்தில் பிறந்து கிராமத்தின் பௌத்த கோவிலையே தனது கலையிடமாக கருதி ஓவியம் வரைந்தவர் யார்?
எச்.ர கருணாரத்ன
12. சுவர் ஓவியம் பயின்ற இடம்?
பிரட் நிறுவனம்,ஜப்பான் சென்றும் ஓவியம் பயின்றார்
13. நீர் வர்ணத்தில் காணக் கூடிய ஊடுபுகும் தன்மையை எண்ணெய் வர்ணத்தில் வரைந்து காட்டி புகழ் பெற்றவர் யார்?
எச் ஏ. கருணாரத்ன
14. இவரது ஓவியத்தின் தனிசிறப்பு?
வேகமான தூரிகை வீச்சு
15. இவரது முக்கியமான ஓவியங்கள்?
கங்கையில் மழை
தாயும் சேயும்
புதிய சந்திரன்
16. எம் .சார்லிஸ் யாரிடம் சிறுவயதில் ஓவியம் பயின்றார்?
ஹென்றிகளிடம்
17. வில்லியம் பேதிரிஸ் உதவியுடன் ஜேர்மினியில் லித்தோ அச்சுமுறையில் சீவிலி பிக்குவின் உருவத்தை அச்சிட்டு விநியோகித்தவர் யார்?
எம் சார்லிஸ்
18. இவர் 1880ல் அம்பலாங்கொடவில் பிறந்தவர்.இவரது ஓவியத்தில் ஐரோப்பிய கலைமரபின் தாக்கம் காணப்படுகின்றது.அவரின் பெயர் யாது?
ஏம்.சார்லிஸ்
19. இவரின் முக்கிய ஓவியங்கள்?
சிவிலிபிக்கு
லுமினி பூங்காவில் சித்தார்தர் பிறப்பு
கிசோகௌதமியிடம் வளர்தல்
சித்தார்த்தின் திருமணம்
யோசியர் சித்தத்தரின் பலன் கூறுதல்
அரண்மனையை விட்டு புறப்படுதல்
20. பௌத்த சமய மறுமலர்ச்சிக்கு ஓவியங்கள் வரைந்தவர் யார்?
எம் சார்லிஸ்

க.அகிலன்

மட்டக்களப்பில் குடும்பத்துடன் குதூகலிக்க

FOURAMS

CITY CENTRE

SHOP SAVE ENJOY

#16, Central Road, Batticaloa. 065 222 2722

*Web: www.fourams.lk*

*FB: www.facebook.com/fourams.citycenter.batticaloa*

உங்களை இளமையாக, எடுப்பாக, அழகாக மாற்றத்தயார்

Young forever

to wow you





#9A, Central Road, Batticaloa. 065 222 2911

*FB: www.facebook.com/fourams.citycenter.batticaloa*

# வடக்கு வாசல் வீடு

நான்!
ஒரு நாளில் முளைத்த விதையல்ல
அல்லும் பகலும் மாரியம்மன் கோயில்
வயற்காட்டு வெளியில்
ஒற்றை விருட்சம் நானே! பார்த்துப் பார்த்து
யோசித்து கற்பனை செய்து
முளைக்கப்பட்டவன்



வடக்கு வாசல் கட்டுடா தம்பி
மலையாய் செல்வம் குவியும் என்றனர்
வெய்யிலிலும் பனியிலும் மழையிலும்
வயற்காட்டு வெளியில் போராடி
ஒற்றை ரூபாயாகச் சேர்த்து
என்னை சுண்ணாம்பு சர்க்கரை சுவராக்கி
முற்றிய பனைத்துண்டு கொண்டு கூரை வேய்ந்து
சுண்ணாம்பு பூசி புது பெண் ஆனது நினைவுள்ளது



தைப் பெங்கல் என்றால் எனக்கும்
கொண்டாட்டம் வீட்டுக்குக் கட்டாயம்
பொங்கணும் என்பார்கள்
கார்த்திகை விளக்கீடு என்றால்
சுவரில் கையால் முத்தங்கள் எத்தனை இன்பமது
இவ் உலகிலே அதிக பிரசவம் பார்த்த
தாய் நானாக தான் இருப்பேன்
எத்தனை பரம்பரைகளை சுமந்தவன்
இன்றும் சுமக்கின்றேன்

ஆனால்...................!

எங்கோ வெகு தூரத்தில் வெடிச்சத்தங்கள்

நான் மட்டும் பயந்தேன் மனிதர் அதை உணரார்....

நாட்கள் ஓடியது வெடிச்சத்தமும் நெருங்கியது



உறவுடனும் உடமையுடனும் புறப்பட்டனர்

நான் மட்டும் அநாதையானேன்.

இன்று

எத்தனை இரவு பகல் அடிவாங்குகிறேன்

குண்டு மழையில் குளிக்கின்றேன்

எனது கூரை எங்கே?

எனது சுவர்கள் எங்கே?

எனது பிள்ளைகள் எங்கே? இருப்பார்களா?

தெரியவில்லை......!

மீண்டும் நான் வடக்கு வாசல் ஆவேன்

ஏன் தெரியுமா?

என்னை வித்தாக விதைத்து

விருட்சமாக்கியவன்

ஒரு தமிழன் தான்

மீண்டும் முளைப்பேன்

என்றோ..........!

**வன்னி மைந்தன்**

## பேராசிரியர். சி. மௌனகுருவின் இராவணேசன் குறுங்கதையாடலாகவும் பெண்ணியத்தின் குரலாகவும்

பேராசிரியர். சி. மௌனகுரு அவர்கள் தலை சிறந்த நாடகங்களை வடித்துள்ளார். அவரது நாடகங்கள் அநேகமாக பெரும் வரவேற்பைப் பெற்றவை. அந்த வகையில் ஈழத்து தமிழ்நாடக வளர்ச்சிப் பாரம்பரியத்தில் இவருக்கு தனி இடம் உண்டு. இவர் தனது நாடகங்களைப் படைக்கும் போது அவை சமூக ரீதியாக பொதுமைப்பட்ட நாடகங்களாகவே அமைந்தன. அந்த வகையில் இவர் படைத்த நாடகமான 'இராவணேசன்' குறுங்கதையாகவும், பெண்ணியத்தின் குரலாகவும் அமைந்தது. 2010ல் இந்த நாடகம் மக்கள் மனதில் பெரும் வரவேற்பைப் பெற்றது. இந்நாடகம் பெண்ணியம் பற்றியே பேசுகிறது.

பெண் ஒருத்தி இந்நாடகத்திற்கு ஏதுவாக அமைவதாக மண்டோதரி புலம்புவதனூடாக வெளிப்படுகிறது. இவர் பெண்கள் படுகின்ற அவஸ்தையை நேரிலே நின்று அனுபவித்தவர் போல் சுட்டுகின்றார். கணவனாலும், பிள்ளைகளாலும் பெண்கள் படும் அவஸ்தையை மிகவும் துல்லியமாகச் சுட்டுகிறார். மேலும் இந்நாடகத்தில் வருகின்ற பாத்திரங்கள் ஒவ்வொன்றிற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார். தனிப்பட்ட ஒரு பாத்திரத்தை முதன்மைப்படுத்தாமல் எல்லாப் பாத்திரங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கின்றார். அந்த வகையில் இந் நாடகம் குறுங்கதையாகவும் அமைகிறது.

மேலும் இந்நாடகத்தில் நேரடியாகவராவிட்டாலும் பெண்ணியம் பற்றிப் பேசப்படும் இரண்டு பெண் பாத்திரங்களும் வருகின்றன சீதை, சூர்ப்பனகை என்பவர்கள். சீதையின் காரணமாகவே இராமாயணம் எழுந்தது. அவளை அசோகவனத்திலே அடைத்து வைத்தனர். அங்கு அவள் பட்ட பாடு எந்தப் பெண்ணுக்கும் வரக்கூடாது. இது போன்றே சூர்ப்பனகையின் காதலை இலக்குமணன் வெறுத்தாலும் அவளது மூக்கை, மார்பை அறுக்க எந்த நீதியும் கிடையாது. அந்நிலையில் அப் பெண்ணின் மனநிலை எவ்வளவு மோசமானதாக இருக்கும் என்பதை நினைத்துப் பார்க்க முடிகிறது. இந் நாடகத்தில் பெண்களின் குரலுக்கு மதிப்பளிக்கப்படவில்லை. ஆண்கள் சாம்ராஜ்யமாக உள்ளது. இது மண்டோதரி என்ற பாத்திரத்தின் ஊடாக நேரடியாக சுட்டப்படுகிறது.

இலங்கையில் அன்மைக்காலத்தில் ஏற்பட்ட யுத்தத்தின் காரணமாக அனேக மக்கள் தங்கள் சொந்தபந்தங்கள், உடமைகள் போன்றவற்றை இழந்து பரிதவித்தனர். எத்தனையோ தாய்மார் யுத்த கொடூரத்தின் காரணமாக தங்கள் பிள்ளைகளையும் கணவன் மார்களையும் இழந்து மண்டோதரி புலம்புவதைப் போன்றே புலம்பினர்.

தமிழ் ஈழமக்கள் கண்ணீர் வடித்த, வடித்துக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் போடப்பட்டதே இராவணேசன். இந்நாடகம் மூலமாகவும் பெண்ணியம் பற்றிய போக்கு சிறப்பாக எடுத்துக் காட்டப்படுகிறது எனலாம்.

"மைத்துனரோடு மகன் சுற்றம் அனைவரும் மாண்டார், மக்கள் அழும் ஒலி மனதை அறைகுறதே ஐயா, எத்தனை பெண்கள் தம் புதல்வருக்காக அழுகின்றானர்.

கிஸ்கிந்தையோடு இலங்கையும் அழுகுதே, ஐயா...."

போன்ற வரிகள் இந்நாடகத்தை பார்த்த பார்வையாளரின் நெஞ்சைத் தொட்டு உசுப்பியது என்றால் மிகையாகாது.

அந்தவகையில் பேராசிரியர். சி. மௌனகுருவின் இராவணேசன் குறுங்கதையாடலாகவும் பெண்ணியத்தின் குரலாகவும் உள்ளது என்றால் மிகையாகாது.



**தனுசியா ஞானசீலன்**

உன்மீது உனக்கு நம்பிக்கை இல்லா விட்டால்
கடவுளே நேரில் வந்தாலும் எந்த பயனுமில்லை

**விவேகானந்தர்**

# இலங்கையின் இசை வளர்ச்சிப் பாதை......



மனிதன் நாகரீகம் அடையும் முன்பே இசை ஒரு தனி மொழியாக விளங்கியது. தமது உணர்வு களை மொழி மூலம் வெளிப்படுத்த முடியாத காலத்தில் இசை மூலம் உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள். பறவைகள், மிருகங்கள் வெளிப்படுத்திய ஒலிகள் மனிதனுக்கு முன்னோடியாக அமைந்தன.

இலங்கை வேந்தன் இராவணன், கயிலை நாதனை சாமகானம் பாடி மகிழ்வித்தான் என்றும், இலக்கிய ஆதாரத்தின் வாயிலாக இராவணன் காலத்திலேயே இசை மரபு இருந்துள்ளது என்பதை அறியக் கூடியதாக உள்ளது.

ஆதிக் குடிகளான இயக்கர் பயன்படுத்திய வாத்தியம் "நாக சின்னம்" என பெயர் பெற்றது என்று "மகாவம்சம்" கூறுகிறது.

ஒல்லாந்தர், போர்த்துக்கேயர் போன்ற ஐரோப்பியர்கள் தம்முடைய மதத்தைப் பரப்பும் ஊடகமாக நாடகங்களைப் பயன்படுத்தினர். இதன் விளைவாக சைவசமயத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக, தாம் கூற வந்த கருத்துக்கள் ஒவ்வொன்றும் மக்களின் மனதை ஊடுருவிச் சென்று ஆழமாக பதிய வேண்டும் என்பதற்காக தம் ஊடகமாக இசையை தெரிந்தெடுத்தனர். இதன் விளைவாகவே சைவ சமயம் சார்ந்த "பள்ளு" "நொண்டி" முதலிய பிரபந்தங்கள் தோற்றம் பெற்றதாக கூறப்படுகின்றன.

19ம் நூற்றாண்டில் இந்தியாவில் இருந்து வந்த வைசிகர்கள் யாழ்ப்பாணத்திலே பெரிய கோவில்களை கட்டுவித்தனர். இது மட்டுமன்றி தவில், நாதஸ்வரம் வாசிப்பதில் விற்பனர்களாகிய இசை வேளாளர்களை இந்தியாவிலிருந்து வரவழைத்து, வண்ணார் பண்ணை சிவன் கோயில் சூழலில் குடியேற்றப்பட்டனர். கர்நாடக இசையை வளர்த்தெடுப்பதில் நாதஸ்வரம் முக்கிய பங்கை வகிக்கின்றது. இத்தகைய நாதஸ்வரமும், தவிலும் ஈழத்திலே ஏனையவற்றிலும் பார்க்க மிக உன்னத நிலையை அடைந்துள்ளது. இன்றும் ஆலயங்களிலும் சரி திருமண சடங்குகளிலும் சரி அநேகமாக மங்களகரமான நிகழ்வுகளில் தவில், நாதஸ்வரத்தின் வளர்ச்சியையும் பெருமையையும் காணமுடிகிறது. தவில் மேதை "தட்சணாமூர்த்தியை" இவ்விடத்தில் நினைவு கூறுவது சாலப்பொருந்தும்.

நவீன மயமாக்கப்பட்டு விஞ்ஞான வளர்ச்சியினால் இயந்திர மனிதனாக நடமாடித்திரிகின்ற இந்த நூற்றாண்டிலும் அனைத்து மதத்தவர்களும் தம் வேண்டுதல்களை, கவலைகளை இறைவனிடம் கூறுவதற்கு இறைவனை புகழ்ந்து உருகி பல பாடல்களை பாடுகின்றனர். வாய் மூலமும் ஏடுகள் மூலமும் வளர்ந்து வந்த இசையானது இன்றைய நவீன உலகில் பல இசை தட்டுக்களாகி எப்பொழுதும், யாராலும் கேட்கமுடியும், ரசிக்க முடியும் என்ற அளவிற்கு வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. 19ம் நூற்றாண்டின் இறுதியில் மட்டக்களப்பில் பிறந்த விபுலானந்த அடிகள் "யாழ்நூல்" எனும் பெருநூலை எழுதி வெளியிட்டார். தமிழிலே சிலப்பதிகாரத்தை போல இசையிலே யாழ்நூல் தனித்துவத்தை பெற்றுள்ளது.

1931ம் ஆண்டு வட இலங்கை சங்கீத சபை ஆரம்பிக்கப்பட்டது. இது இசை வளர்ச்சியின் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. இவ்வளர்ச்சி இன்று மேலும் மேலும் உயர்த்தப்பட்டு இசை மாணவர்களின் வளர்ச்சிக்கு ஒரு

ஊன்று கோலாக திகழ்கின்றது. இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் பாடசாலைகளில் இசை அதாவது கர்நாடக சங்கீதம் ஓர் பாடமாக சேர்த்துக் கொள்ளப்பட்டது. அது மட்டுமன்றி 1972[ம்] ஆண்டு கட்டாயப் பாடமாக அழகியற் கல்வியில் இசையும் ஓர் பாடமாகச் சேர்க்கப்பட்டது.

இலங்கையிலே கர்நாடக இசைக்கீடாக பண்ணிசையும் வளர்ச்சி பெற்று வந்துள்ளது. பண்ணிசை வளர்த்தவர்களுள் குப்பிளான் செல்லத்துரை, திருமறை இசைவாணர், மு.கு.குமாரசிங்கம், பண்ணிசை வள்ளல் செ.இராசையா போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள். குமார சுவாமிப் புலவரால் புராண படலக்கலையும், நல்லைக்குரு ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாதஞான சம்பந்த நிலைக்கு கொண்டு வரப்பட்டன.

20[ம்] நூற்றாண்டில் மெல்லிசையும் வளர்ச்சியுற்றது. பல மெல்லிசை ஒலி இறுவெட்டுக்களும் தற்பொழுது வெளியிடப்பட்டுள்ளன. கிராமப்புறங்களை மையமாகக் கொண்டு எழுந்தபாடல்களே கிராமிய இசை என்று கூறப்படுகின்றன. இவர்கள் தம் வாழ்க்கையில் பிறப்பில் இருந்து இறப்பு வரை நடக்கும் அனைத்து சம்பவங்களையும் கூறுவதாக அமைகின்றன. இவை ஒவ்வொன்றும் நமக்கே உரித்தான சொத்துக்களாக பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக இவை இசை பாடத்தில் ஒரு பிரிவாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் விளைவாக இன்றும் பற்பல கிராமியபாடல்கள் மெல்லிசை பாடல்கள் தோற்றம் பெற்ற வண்ணம் உள்ளன. இவை இடத்திற்கிடம் வேறுபடுகின்றன. உருவேற்றம், தாலாட்டு, அரிவு வெட்டுப்பாடல் போன்றன இதற்கு உதாரணங்களாகும். ஈழத்து மக்களிடையே பல வகை கூத்துக்களும், நாடகங்களும் இடம் பெறுகின்றன. அவற்றிலே விலாசம், பார்ஸி இசை மரபைச் சார்ந்த அண்ணாவி மரபு நாடகம், கர்நாடக இசை வளர்ச்சிக்கு பெரிதும் உதவி வந்துள்ளன.

தற்போது இலங்கைப் பாடசாலைப் பாடத்திட்டத்திலும், பல்கலைக்கழக பட்டப்படிப்பிலும் ஒரு பாடமாகவும் சிறப்பு பாடமாகவும் சேர்க்கப்படும் அளவிற்கு இசை இலங்கையில் வளர்ச்சி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். அது மட்டுமன்றி இசையை ஒரு தொழிலாகக்கொள்ளும் அளவிற்கு உயர்ந்த அந்தஸ்தை இசைக்கலை பெற்றுள்ளது.

மெல்லிசை பாடல்கள், கிராமிய இசைகள், கர்நாடக இசைப் போட்டிகள் என்று பல இசைப் போட்டிகள் பாடசாலைகளிலும் பலகலைக்கழகங்களிலும் வெளிமாவட்ட ரீதியிலும் நடை பெறுகின்றன. இவை மட்டும அன்றி வானொலி ரீதியிலும் தொலைக் காட்சிகள் மூலமும் பல இசைப் போட்டிகள் நடாத்தப்பட்டு இலங்கையில் எட்டு திக்குகளிலும் இசை வளர்ச்சி அடைந்திருப்பதைக் காண முடிகின்றது. கவிதா ஆற்றல் போட்டிகள், இராக மேடை, சக்தி **Super star** என்பன இதற்கு உதாரணமாக கூறலாம்.

இன்றும் நம் நாட்டு இளைஞர்கள் மத்தியில் பெரும் கனவாக "குறுந்திரைப்படம்" உருவாக்கம் பெற்று காணப்படுகின்றது. அவர்கள் தம் கற்பனை வளங்களை கவிதையில் வடிவமைத்து அதற்கு இசை உருவம் கொடுத்து இளைஞர்கள் மத்தியில் நம் நாட்டுப் பாடல்களாக தவழ விடப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் நம் இலங்கை நாட்டின் உச்சக்கட்ட இசை வளர்ச்சியையே காட்டி விடுகின்றது.

இலங்கையில் பல பாகங்களில் இசையை வளர்க்கும் நிறுவகங்களும் பல்கலைக்கழகங்களும் காணப்படுகின்றன. அவையாவன...

- சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம்.
- இராமநாதன் அக்கடமி, யாழ் பல்கலைக்கழகம்.
- வட இலங்கை சங்கீத சபை.
- யாழ் இளம் கலைஞர் மன்றம்.
- இசைப் பேரவை.
- அகில இலங்கை இசை ஆசிரியர் சங்கம்.
- கண்டி நுண்கலை மன்றம்.
- கொழும்பு சைவ மங்கையர் கழக இசைப்பிரிவு.
- அளவெட்டி இசைக் கலா மன்றம்.
- திருகோணமலை தட்சண கான சபா என்பனவும் குறிப்பிடத்தக்கவையாகும்.

இவ்வாறாக இலங்கையின் இசை வளர்ச்சியை உற்று நோக்கி பார்க்கும் போது, இன்றைய கால கட்டத்தில் மட்டும் அல்ல ஆதிகாலத்திலிருந்து ஆலயங்களில், சடங்குகளில், பாடசாலைகளில் பட்டப்படிப்புக்களில், குறுந்திரைப்படங்களில், பற்பல இசைப்போட்டிகளில் என்று வெவ்வேறு ரீதியில் இசையானது வளர்ச்சிப் பாதையில் செல்கின்றது. "இசைக்கு வசமாகா இதயம் ஏது" என்பதற்கிணங்க இன்று அனைவரும் இசையை அறிந்து, கேட்டு ரசிக்கின்றனர் என்றும், இசையானது ஒவ்வொருவருடைய மனதையும் அமைதிப்படுத்தி பக்குவப்படுத்தி நிம்மதியை அடைந்து மகிழ்ந்து கொள்ள தன் உள்ளே ஈர்த்து இழுத்துள்ளது என்றும் கூறலாம்.

"நம் ஈழத்தவர்கள் எதற்கும் சளைக்காதவர்கள்" என்று கூறும் அளவிற்கு இன்று நம் நாட்டில் இசை உயர்ந்த பாதையை தேடி உச்ச நிலையை அடைந்து கொண்டிருப்பதை காணமுடிகின்றது.

**மேரிசந்ரமலர் செல்வநாயகம்**



**நான் எடுக்கும்**
**முடிவு சரியா என்று**
**எனக்கு தெரியாது**
**ஆனால் எடுத்த**
**முடிவை சரியாக்குவேன்..**

-மாவீரன்-
அலெக்ஸ்சாண்டர்

கிழக்கு மாகாணத்தில் முதன்முறையாக

VALUABLE MEDIA COURSES

# ஊடகத்துறை

## கற்கை நெறிகள்

- Art & Design
- Announcing
- Journalism
- Layout Designing
- Photography
- Video Production
- Social Media
- Political Media
- Visual Animation




- கொழும்பிலிருந்து வருகைதரும் அனுபவமிக்க விரிவுரையாளர்களின் கீழ் விரிவுரைகள் நடைபெறும்.
- குறைந்த கட்டணம், குறுகியகாலம். முழுமையான வளர்ச்சி, செயல்திட்டங்களுடன் கூடிய கற்கை.
- சர்வதேச பல்கலைக் கழகங்களிடமிருந்து பரீட்சை மற்றும் பயிற்சி பெறும் வாய்ப்பு.
- அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழுடன் ஊடக நிறுவனங்களில் உள்ளகப்பயிற்சி மற்றும் தொழில் வாய்ப்பு.

## பதிவுகளுக்கு முந்துங்கள்

**BRANCH:**

294, New Kalmunai Road, Kallady, Nochchimunai, Batticaloa
Mobile: +94 (0) 71 2164061 Tel: +94 (0)65 2222832
E-mail: voiceofmedia.batti@gmail.com

VOICE of media
NETWORK
88-1/1 Wattarapola Road, Mt.Laviniya
+94(0)11 31 50 836 / +94(0)71 21 64 061

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு விசேட கழிவுகள்!

# மட்டக்களப்புக் கூத்துக்கள்....



மட்டக்களப்பு சமூக அமைப்பிற்கும் கலை வடிவங்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் உண்டு. குறிப்பிட்டதில் பிரதான கலை வடிவங்களை நிர்ணயிப்பதில் பெரும் பங்கு கொள்கிறது. வளர்ச்சியடைந்த கூத்து தமிழர்கள் மத்தியில் நிலமானியச் சமூகத்தை பிரதிபலிப்பதுடன் அதனை கட்டிக்காக்கும் உள்ளடக்க உருவங்களைப் பெற்றுள்ளது. நிலமானிய சமூகத்தின் உளவியல் தேவைகளையும் அது நிறைவேற்றுகின்றது. அந்தவகையில் தமிழர் பண்பாட்டோடு பின்னிப் பிணைந்ததாக கீழ்வரும் கூத்து வடிவங்கள் மட்டக்களப்பில் பிரபல்யம் பெற்று விளங்குகின்றன.

1. மகிடிக் கூத்து
2. பறைமேளக் கூத்து
3. வசந்தன் கூத்து
4. வடமோடிக் கூத்து
5. தென்மோடிக் கூத்து
6. விலாசம்

### மகிடிக்கூத்து

இந்த நாடகம் சமயச் சடங்கிலிருந்து விடுபட்டதும் அதே நேரம் மட்டக்களப்பில் இந்து மத சமயச் சடங்குகளில் பயன்படுத்தப்படும் வணக்க முறைகள் கிரியை முறைகளில் தாள வாத்தியம் பயன்படுத்தப்படுவதுமான நாடகமாகும்.

அந்த வகையில் மகிடி என்ற சொல்லிற்கு பல கருத்துக்கள் உண்டு. மந்திர தந்திரங்களை காட்டும் விளையாட்டு என்ற ஒரு அர்த்தமும் அதற்கு உண்டு. இம்மகிடிக் கூத்தில் பெருமிடத்தை பிடிப்பது அதுவே மட்டக்களப்பு மந்திரத்துக்கு பெயர் போனது என்ற கருத்தும் உண்டு. அப்பண்பு மகிடிக் கூத்தில் பிரதி பலிக்கிறது.

மூன்று வகை மகிடிக் கூத்துகள் இங்கு ஆடப்படுகின்றன. முதலாவது வகை மகிடிக் கூத்தில் மலையாள நாட்டிலிருந்து வரும் ஒண்டிப்புலியும் அவனது மனைவி காமாட்சியும் தமது கூட்டத்தாருடன் மட்டக்களப்புக்கு வந்து அங்கு வாழ்ந்த மந்திரவாதியுடன் போட்டியிட்டு அப்பிரதேசத்தில் குடியேறியமை நிகழ்த்திக்காட்டப்படுகிறது.

இரண்டாவது வகை மகிடிக் கூத்தில் கதையம்சம் அதிகமில்லை. மந்திர வேலைகள் நடைபெறுகின்றன. மகிடியினை வேடன், வேடுவிச்சி, வெள்ளைக்காரன், வெள்ளைக்காரி ஆகியோர் பார்க்க வருவது இதில் நிகழ்த்திக் காட்டப்படுகிறது.

மூன்றாவது வகை மகிடிக் கூத்து முதலிரண்டு மகிடிக்கூத்துக்களை விட வித்தியாசமானது. இதில் மந்திர தந்திர விளையாட்டுக்கள் இருப்பினும் காமாட்சி, மீனாட்சி, வசிட்டர் ஆகியோர் சம்மந்தமான கதையும் குற்றால குறவஞ்சியின் சாயல் பொருந்திய குறவன், குறத்தி கதையும் நிகழ்த்திக் காட்டப்படுகிறது.

இம் மகிடிக் கூத்துக்கள் திறந்த வெளியில் செவ்வக – சமதள அரங்கில் பகல் வேளைகளில் நடை பெறுகின்றன. முதலிரு வகை மகிடிக் கூத்துக்களுக்கும் எழுத்து வடிவில் அமைந்த நாடகப் பிரதிகள் இல்லை. மூன்றாம் வகை மகிடிக் கூத்துக்கு எழுத்துரு உண்டு. இதன் மேடையமைப்பு முன்னைய இரண்டிலிருந்தும் சற்று வித்தியாசமானது.

முதலாவது வகையான மகிடிக் கூத்து முன்னாளில் முக்குவர் மத்தியில் இருந்தது என்று அறிகின்றோம். ஆனால் இப்போது இக்கூத்து மரமேறும் தொழிலை செய்வோர் மத்தியிலும் வழக்கிலுள்ளது. மூன்றாவது வகை மகிடிக் கூத்து மீன்பிடித் தொழில் செய்வோர் மத்தியில் வழக்கிலுள்ளது. மூன்றாவது வகை மகிடிக் கூத்தினை பறை மேளம் அடிக்கும் வகுப்பினர் மாத்திரமே ஆடுகின்றனர். சாதிக்கு ஒரு மகிடிக் கூத்து இருப்பது ஆராய்வுக்குரியதொரு விடயமாகும்.

மூன்றாவது வகை மகிடிக் கூத்து எழுத்துருவைக் கொண்டது என ஏற்கனவே கூறினோம். தென்மோடி, வடமோடி கூத்துக்கள் செல்வாக்கு பெற்றிருந்த பிரதேசத்தில் வாழ்ந்த பறைமேளம் அடிக்கும் வகுப்பினர், உயர் வகுப்பினர் இணக்கத்துடன் ஒரு புலவர் மகிடிக் கூத்தை நாடகமாக்கி கொடுத்திருக்கலாம் என நாம் ஊகிக்க கூடியதாவுள்ளது. தென்மோடி, வடமோடி கூத்துக்கள் மட்டக்களப்பு வந்த போது அவற்றை சமூகத்தின் உயர் வகுப்பினர் தமதாக்கிக் கொள்ள, செல்வாக்கிழந்த மகிடிக் கூத்தினை குறைந்த வகுப்பினர் தமதாக்கியிருக்க, எவ்வாறாயினும் மகிடிக் கூத்து இன்று உயர் வகுப்பினர் மத்தியில் செல்வாக்கு பெற்ற கூத்து என்பது மனங்கொள்ளத் தக்கதோர் அம்சமாகும். "மட்டக்களப்புத் தமிழகம்" எழுதிய வி.சி. கந்தையா கூட இக்கூத்து பற்றி தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

## பறைமேளக் கூத்து

பறைமேளம் அடிக்கும் வகுப்பினரால் மாத்திரமே இக் கூத்து ஆடப்படுகிறது. வடமணிந்து இருவர் தமது பறைகளை அடித்து பல்வேறு தாளங்களுக்கு உடலை அசைத்து ஆடுவதே இக்கூத்தாகும் கோயிலின் வெளியிலேயே சமதள அரங்கில் மக்கள் சூழ்ந்திருக்க இக்கூத்து நடைபெறும். ராசா வரவு, மந்திரி வரவு, கோடாங்கி வரவு என அவர்களுக்குரிய வரவுத்தாளங்களை பறையில் எழுப்பி, அவ்வோசைக்கு ஏற்ப ஆடுவர். இதில் கதையம்சம் இன்மையாலும், ஒரு தனிச் சமூகத்திற்கு மாத்திரமே உரிய கூத்தாக இது இருந்தமையாலும் இது ஏனைய சமூகத்தவரால் ஆடப்படவில்லை. மகிடிக் கூத்தும், பறைமேளக் கூத்தும் ஆடுவோர் குறைந்த வகுப்பினராக கருதப்பட்டவர்களே. செல்வாக்கு பெற்ற கூத்தாக திகழ்ந்த அதே வேளை வசந்தன் கூத்து சமூகத்தின் உயர் வகுப்பினராக கருதப்பட்டவர்களிடையே செல்வாக்கு பெற்ற கூத்தாக விளங்கியது.

## வசந்தன் கூத்து

பன்னிருவர் வட்டமாய் நின்று கோல் கொண்டு தாள அமைவு பிசகாது ஆடும் ஓர் ஆடல் ஆகும். இவ் ஆடல் சமயக் காரணங்களுடன் சம்மந்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ஊரிலே மழை பெய்யாத போது ஊரினை வடசேரி, தென்சேரி என இரண்டாக பிரித்து கொம்பு முறிப்பார்கள். இதில் வெற்றி கொண்டோர் இக்கூத்தினை ஆடி மகிழ்வர். கண்ணகி அம்மன் மதுரையை எரித்தும் சினம் தணியாது கோபம் கொண்டு வருகையில் அவளை மகிழ்விக்க சிறுவர்கள் ஆடிய கூத்து இது என்பது ஒரு ஐதீகம். கண்ணகி அம்மன் குளிர்த்தி நாட்களில் இக்கூத்து ஆடப்படுகின்றது.

கண்ணகியம்மன் வழிபாடு, குளிர்த்தி, கொம்பு முறித்தல் என்பன மட்டக்களப்பு சமூக அமைப்பில் உயர் குடியினர் மத்தியிலே வழக்கில் உள்ளன. வெள்ளாளர், முக்குவர், சீர்பாதகாரர் ஆகியோர்கள் மத்தியிலேயே கண்ணகி கோயில்கள் உள்ளன. எனவே இதனையொட்டிய வசந்தன் கூத்தும் சமூக அமைப்பின் உயர் வகுப்பினருக்கு உரியதாயிற்று.

வசந்தன் கூத்தில் கதையில்லை. ஆனால் ஆடல் பாடல் உண்டு. விடிய விடிய நடைபெறும். இக்கூத்தில் மத்தளமும், சல்லாரியுமே வாத்தியங்களாகும். இதில் வரும் ராகம், தாளம் என்பன தென்மோடிக் கூத்து வகையைச் சேர்ந்தது. தென்மோடியின் தோற்றத்தில் வசந்தன் கூத்துக்கே பிரதான பங்குண்டு.

மட்டக்களப்பில் மீன் பிடிப்போர் மத்தியில் கண்ணகி வழிபாடு இருப்பினும் அவர்களிடம் வசந்தனாட்டமும், கொம்பு முறித்தலும் இல்லை. சமூக அமைப்பில் அடி நிலை மக்களாக கருதப்படு வோரிடமும் இவ் வசந்தன் ஆட்டம் செல்லவில்லை. எனவே கண்ணகி வழிபாடு அதனோடு தொடர்புடைய வசந்தன் கூத்தும் சமூக அமைப்பில் உயர்ந்த மக்களின் சொத்தாக உள்ளது.

## வடமோடிக் கூத்து

இந்தியாவிற்கு வடக்கே இருந்து வந்த கூத்து வடமோடி ஆகும். அதாவது தமிழ் நாட்டிற்கு வடக்கேயுள்ள கன்னடம், ஆந்திரா பிரதேசங் களிலிருந்து வந்தவையாகும். இதனை ஆரியக்கூத்து என்றும் அழைக்கப்படுகிறது. இராமாயணம், புராண இதிகாசக் கதைகள் அல்லது அவற்றின் கிளைக் கதைகள் இடம்பெறும். இவை, போர், வீரத்தினை அடிப்படையாகக் கொண்டிருக்கும். இதனால் வீர ரஸம் மேலோங்கிக் காணப்படும்.

இதில் நுணுக்கம் குறைவானதும், விரைவான அசைவுகளையும் கொண்டிருக்கும். இதில் பாதம் முழுவதும் நிலத்தில் படும், உரசி இழுத்தாடப்படும். விருத்தம் இழுத்துப் பாடப்பட முழுப்பாடல்களும் பிற்பாட்டுக்காரர் இழுத்துப் பாடுவர். பாரம் கூடிய கரப்புடுப்பு, கிரீடம் போன்றன இவ் வடமோடிக் கூத்தின் உடையமைப்பின் பண்புகளாக அமைகின்றது.

## தென்மோடிக் கூத்து

இந்தியாவின் தெற்கே இருந்து வந்த கூத்துக்கள் தென்மோடிக் கூத்தாகும். இது தமிழ் நாட்டிற்கே உரியதாகும், இதனை தமிழ்க் கூத்து என அழைப்பர். பெரும்பாலும் நாட்டார் கதைகளையும், கற்பனைக் கதைகளையும் கொண்டனவாக இருக்கும். இவை காதலை அடிப்படையாக கொண்டிருக்கும். இதனால் சிருங்கார ரஸம் மேலோங்கிக் காணப்படும்.

இதில் ஆடல் நுணுக்கமானதாகவும், மென்மையானதாகவும் அமையும். இதில் பாதத்தின் முற்பகுதி, குதிப்பாதம் இரண்டு மட்டும் நிலத்தில்படும் படி உள்ளன. கால் நிலத்தில் படாதவாறு குத்தி மடித்தாடப்படும். விருத்தம் இழுத்து பாடப்படும். பாத்திரம் பாடிய பின்னர் பாடலின் இறுதி வரி மாத்திரம் பிற்பாட்டுக்காரர்களால் இரட்டித்தும் பாடப்படும். பாரம் குறைந்த உடைகளை பெரும்பாலும் அணிவர். மணியுடுப்பு, பட்டு உடுப்பு, பூ முடி போன்றவற்றுடன் தென்மோடி ஆற்றுகை செய்யப்படும்.

**- சாலினி மகாலிங்கம்**



**“இந்த உலகமே
உன்னை திரும்பி
பார்க்க வேண்டுமானால்....
நீ யாரையும்
திரும்பி பார்க்காதே....”**

-ஹிட்லர்-

# கடலே ஞாபகம் இருக்கின்றதா...?

கடலே உனக்கு
ஞாபகமிருக்கிறதா?
உன் அலைகளின்
நாட்டிய அரங்கேற்றத்தால்
எங்கள் இதயங்களை
கசக்கிப் பிழிந்த கதை



உன்னில் இருந்து பிறந்தவர்கள்
என்ற உரிமையினாலா?
எங்களவர்களின் உயிர்களை
பறித்தெடுத்தாய்
உன் மடியில்
உள்ள முத்து, சொத்துக்களை விடவா?
எங்கள் சொத்துகள்
பெரிதாக தெரிந்தது உனக்கு?



உன்னிடம் கேட்காமல்
உன் ஊருக்குள்
வந்து போகும்
நட்பினால்தானே! நீ
எங்கள் வீடுகளுக்குள்
புகுந்திருக்கிறாய்.
புகுந்த பின் மன்னி என்றால்
மன்னிப்பதெப்படி?

இனியும் உன்
இனிதான நட்பு, தொடரும்
இருந்தும் இனியும்
ஊருக்குள் உட்புகுந்து நட்பை நாசமாக்கி விடாதே!
உன்னை பற்றி ஊருக்குள்
பெரிதாக சொல்லியிருக்கிறேன்.

**தர்ஷிகா ஸ்ரீதரன்**

நினைவுகள் உயிர் இல்லாதவைதான் ஆனால்...
சிலர் உயிர்வாழ காரணமே...
அந்த நினைவுகள்தான்...

# தொல்காப்பியத்தில் காதல்



தொல்காப்பியர் களவியல், கற்பியல் இரண்டு பகுதிகளிலும் காதலைப்பற்றி மிகுதியாக கூறுகிறார். இரண்டிலும் உணர்ச்சி வழி செயற்பாடுகளைக் கூறுகின்றார். எனினும் அச்செயற்பாடுகள் அறிவு வழி செயற்பாடுகளாக மாறிவிடுவதையும் காட்டிச் செல்கிறார். அதனால் தொல்காப்பியர் காலத்துக் காதலர்கள் எல்லாம் உணர்வழி அகற்றி. அறிவு வழி காதலித்தனர் என்றால் அது நகைப்பிற்கு இடமாகும். உணர்வுவழி காதலர்களாகும் ஆணும், பெண்ணும் திருமணத்திற்கு பின்னும் காதலர்களாக இருக்க அறிவுவழி செயல்பட வேண்டும் என்ற விருப்பத்தையே களவியல், கற்பியல் ஆகிய பகுதிகளில் கூறுகின்றார் என்பது கட்டுரையாளரின் கருத்து. கம்பன் கொடுப்பாரும் கொள்வாரும் இன்றி எல்லா வளமும் எல்லாரும் பெற்று வாழவேண்டும் எனத் தான் விரும்பிய சமுதாயத்தை அயோத்தி சமுதாயமாகப் படைத்து காட்டினான். என்பர். அது போல காதலர்கள் களவியலும், கற்பியலும் செயற்பட வேண்டியதன் விருப்பங்கள் தொல்காப்பியத்தில் படைத்துள்ளார். தெய்வத்தின் கூட்டாகவோ, அல்லது விதி வழியாகவோ ஆணும், பெண்ணும் எதிர்பாராத விதமாகச் சந்தித்துக் கொள்கின்றனர். இச் சந்திப்பு அவர்களின் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. பார்க்கின்ற எல்லா ஆண் அல்லது பெண்ணால் தாக்கம் எற்படுவதாகக் குறிக்கப்படவில்லை. பிறப்பு, குடிமை, ஆண்மை, ஆண்டு, உறவு, அன்பு, நிறை, அருள், உணர்வு, திரு ஆகிய பத்து ஆளுமைக் குணங்கள் ஒன்றுபட்டிருக்கும் ஆணும், பெண்ணும் எதிர்படும் பொழுது இத்தாக்கம் ஏற்பட்டுப் பின் அது குறிப்பால் ஒருவர் எண்ணத்தை ஒருவர் அறிந்தபின் காதலராக மாறுவது நலம் என்பது தொல்காப்பியர் கருத்து. தழிழ்ச் சமுதாயம் தொல்காப்பியர் காலத்திலேயே ஆணாதிக்கச் சமுதாயமாக இருந்துள்ளது. எனவே மேற்கூறிய பத்து ஆளுமைகள் சிலவற்றில் மிக்கோனாக ஆண்மகன் இருப்பினும் எனக் கூறுகிறார்.

இன்றைய வாழ்விலும் இவ் ஆளுமைகள் ஒத்து இருக்குமேயானால் இவ்வாழ்க்கையில் உரசல்கள் தவிர்க்கப்படுவது உறுதி. எனினும். இக்குணங்கள் ஒத்தில்லாத தம்பதியர் ஒத்து வாழ்வதையும், இன்றைய நாளில் காண முடிகிறது. தொல்காப்பியர் காதல் வயப்படும் ஆணும் பெண்ணும் அறிவுவழி செல்ல வேண்டும் என்பதை அவர்களின் முதல் சந்திப்பிலேயே எச்சரித்து விடுகிறார். மேற்கூறிய பத்து ஆளுமைகள் பெரும்பான்மை ஒத்து இல்லாவிட்டால் அது பிரிவுக்கு வழி வகுக்கும் என்பதே அவர் கருத்து என அறியப்படுகிறது.

சந்தித்த ஆணும், பெண்ணும் காதல் வயப்பட்ட பின்பு ஒருவர் விருப்பத்தை இன்னொருவர் புரிந்து கொள்ளுதல் அவசியம். ஆனால் இதற்கு வாய் வார்த்தைகள் தேவையில்லை. கண் என்னும் ஊடகத்தின் வாயிலாகக் கருத்தை சொல்பவர். கேட்போரிடம் எவ்வகைத தடங்கலுமின்றி தெரிவித்திட முடியும் என்கிறார் தொல்காப்பியர்.

"நாட்டம் இரண்டும் அறிவிடம் படுத்தற்குக்
கூட்டியுரைக்கும் குறிப்புரையாகும்"

பத்துக் குணங்களின் ஒன்றாகிய அறிவால் ஒத்த ஆண் பெண்ணால்தான் பிறர் அறியாமல், வாய்மொழி இல்லாமல் உள்ளக்கருத்தை ஒருவருக்கொருவர் தெளிவாக உணர்த்த முடியும் என்பது தொல்காப்பியர் எண்ணம். ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவான பத்து ஆளுமைக் குணங்களைக் கூறிய தொல்காப்பியர் பெருமையும், உரனும் ஆணுக்குத் தேவையான கூடுதல் ஆளுமைப் பண்புகளாகக் குறிப்பிடுகிறார்.

"பெருமையும் உரனும் ஆடு மேன" அறிவு, ஆற்றல், புகழ், கொடை, ஆராய்தல், நல்லொழுக்கம், நட்பு, பழி பாவங்களிற்கு அஞ்சுதல் ஆகியவை பெருமைக்கும் பிடிப்பான கொள்கை கலங்காத துணிவு உரனுக்கும் பொருளாகக் கூறப்படுகிறது.

ஆண்மகன் இல்லறத் தலைவனாகிறான் அதே நேரத்தில் சமுதாய நடவடிக்கைகளிலும் பங்கு கொள்கிறான். இல்லறம், சமுதாயம் இரண்டிலும் அறிவும், நற்குணங்களும், கொள்கைப் பிடிப்பும், முடிவெடுக்கும் துணிச்சலும் அவசியம் என்பதைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். அதேபோல் வீட்டில் மட்டும் தலைமை ஏற்கும் பெண்ணுக்கு அவர்களின் வழக்கப்படி சில ஆளுமை பண்புகளைக் குறிப்பிடுகிறார்.

"அச்சமும் நாணமும் மடனும் முந்துறுத்த நிச்சமும் பெண்பாற்குறிய" என்கின்றார். இக்காலப் பார்வைப்படி இச் சொற்கள் பெண்ணடிமைத்தனத்தின் செயல்பாடு என்றாலும் அக்காலச் சமுதாய அமைப்பை நமக்குக் கிடைத்திருக்கக் கூடிய இலக்கியச் சான்றுகளைக் கொண்டு எண்ணிப்பார்க்க வேண்டும். மன்னர் ஆட்சியின் கிழ் பலதரப்பட்ட போட்டிகள் குறைந்த தேவைகள், குறைந்த வேளாண்மை சிறுதொழில்கள் மட்டுமே உள்ள

மனிதப் பண்புகள் நிறைந்த மாறுபட்ட சிந்தனைகள் இல்லாத சமுதாயமாக இருந்த காரணங்களினால் பெண்களின் பங்களிப்பு சமுதாயத்திற்கு தேவைப்படாத காலமாய் இருந்தது அதனால் பெண்ணின் வாழ்க்கை இல்லறத்திற்குள்ளேயே நிறைவு பெற்றது. அதனால் தொல்காப்பியர் காலப்பெண் அச்சம், நாணம், மடம் நிறைந்தவளாகவே இருந்திருப்பாள். ஆயினும் அறிவு நிரம்பப்பட்டவள் என்பதை உணர்த்துகிறார் தொல்காப்பியர்.

காதல் வயப்பட்ட ஆணும், பெண்ணும் தனித்திருந்து தங்கள் காதலை வெளிப்படுத்துகின்ற தருணத்தில் பெண் தன்னுடைய வேட்கையைத் தன் காதலனிடம் கூறமாட்டாள். காதலியின் அக உணர்வைப் புரிந்து கொண்ட காதலன் அவளிடம் கேட்கும் பொழுது கூட அதை தன் வார்த்தைகளால் கூறாது புது மண்கலத்தில் ஊற்றப்பட்ட நீரானது புறத்தே கசிவது போல தன் குறிப்பால் வெளிப்படுத்துவான் என்கின்றார். தனித்திருக்கும் வேளையிலும் தன் புலன்களை அடக்கும் ஆளுமைப்பண்பு கொண்ட அறிவால் பெண்ணின் தலைமை இல்லறத்தை இனிது நடத்தும் என்பதை தொல்காப்பியர் புலப்படுத்துகிறார். காதல் வயப்பட்ட பெண் வரம்புக்கடங்காதவளாக இருத்தல் நலம் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றார். காதலனும் காதலியும் பழகும் காலத்தில் யாருக்கும் தெரியாமல் சந்திக்கும் இடத்தைப் பெண் தான் தீர்மானிக்கிறாள். காரணம் தனக்கு பாதுகாப்பாகவும், தங்கள் காதல் குறிப்பிட்ட காலம் வரை பிறருக்கு தெரியாமல் இருப்பதே நலம் என்று கருதியும் காதலி சந்திக்கும் இடத்தைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை "அவன் வரம்பிறத்தல் அறந்தனக்கின்மையின் களம் சுட்டும் கிளவி கிளவியதாகும் தான் செலற்குரிய வழியாகலான"

என களவு காலத்திலும் பெண் உணர்வு வழி ஒதுக்கி அறிவு வழிச் செல்ல வேண்டுமென விரும்புகிறார். திருமணத்திற்கு பின் பெண்ணுக்கு சில கூடுதல் பொறுப்புக்கள் அவசியம் என்கின்றார்.

"கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும் மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின் விருந்து புறந்தருதலும் சுற்றமும் ஓம்பலும் பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்" என்கின்றார். அறிவு முதலான ஆளுமைகளைக் கொண்ட பெண்கள் தான் எப்படிப்பட்ட சூழலிலும் ஆணிண் அன்பு மாறுபட்டு சென்ற காலத்திலும் கற்பு, காமம், ஒழுக்கம், மென்மை, பொறை, நிறை, விருந்து, சுற்றம் காக்க முடியும் என்பது தொல்காப்பியர் கருந்து. பெண்ணுக்கு மேலும் சில கூடுதல் பண்புகளைக் கூறுகிறார். அப் பெண்கள் தவிக்கும் நிலையினை சமுதாய வழி நின்று விளக்குகின்றார். "தாய் போல் கழறித் தழீக் கோடலாய் மனைகிழத்திக்கும் உரித்தென மொழிய" அது போல் தலைவனின் புகழுக்கு இழுக்குவராமல் நடந்து கொள்ளுதலையும் வலியுறுத்துகிறார்.

கணவன் தன்னோடு ஒத்த சிறப்புகள் அல்லது மிக்க சிறப்புக்கள் கொண்டவனாயிருப்பினும் பெண் அவனிடம் தன்னைப் புகழ்ந்து கூறுதலை தவிர்த்து விடுதல் அவசியம் என்கின்றார்.

"தற்புகழ் கிழவி கிழவன்முன் கிளத்தல் எத்திறத்தானும் கிழத்திக்கில்லை" இவ்விடத்தில் தொல்காப்பியர் ஆணிண் உளவியலை ஆண்வழி நின்று விளக்குகிறார். மிக்க அன்புடையவனாக இருப்பினும் மனைவி உண்மையிலேயே தன்னை விட உயர்ந்தவளாக இருந்தாலும் ஆண்மனம் அதை ஏற்றுக் கொள்ளாது. மாறாக ஏதிர்ச் செயல்களை விளைவிக்கும்' இச்சமுதாயம் பெண்ணை விட ஆணையே உயர்ந்தவன் என்ற கருத்தினைக் கொண்டது. அக் கருத்தே ஆண்மகன் எண்ணத்திலும் ஊறியிருக்கும். எனவே குடும்பத்தில் இலக்கணம் குறைய வாய்ப்புள்ளது என்பதால் அதைத் தவிர்க்க அறிவுறுத்துகிறார்.

தொல்காப்பியர் ஆணாதிக்கச் சமுதாயத்தைச் சார்ந்தவர். அக்காலச் சமுதாயத்தில் தோன்றிய ஆண் பெண்ணுக்கு இடையே ஏற்படும் காதலைக் கூறுகிறார். இல்லறத்தில் கணவன் மனைவியாக நுழையப்போகும் களவியல் காதலன், காதலிக்குத் தேவையான பத்து ஆளுமைப் பண்புகளைக் குறிப்பிட்டு களவு, கற்பு இரு காலத்திலும் உணர்ச்சிவழிக் காதலை அறிவுவழிச் செலுத்தினால் நல்ல இல்லறத் தலைவர்களாக வாழ முடியும் என்கின்றார். பொதுவாக ஆளுமைப் பண்புகளைக் குறிப்பிட்டு இருவருக்கும் தேவையான தனிச்சிறப்பு ஆளுமைப் பண்புகளையும் குறிப்பிட்டு பெண்ணுக்கு தேவையான கூடுதல் பொறுப்புக்களையும் சுட்டிக்காட்டுகிறார். அவர் குறிப்பிட்ட குணநலங்களை உடைய ஆணும் பெண்ணும் வீட்டுக்கும் நாட்டுக்கும் தேவை என்னும் தன் விருப்பத்தை களவியல் கற்பியல் ஆண், பெண் மீது ஏற்றிக் கூறுகிறார். இப் பண்புகளை உடையோரின் காதல் வாழ்க்கை சிறக்கும் என்பது தொல்காப்பியரின் கருத்து.

நன்றி.

தொல்காப்பியம் பொருளும் வாழ்வியலும்

**பொன். சுரேந்திரன்**

வீழ்வது நம் தவறல்ல வீழ்வதை எண்ணி
எழாமலிருப்பதே நம் தவறு...

- ஹிட்லர் -

*Best Compliment from:*

# NILAM

nether wear specialists

## நலம் பேண நாடுங்கள்
## அகம் பேணும் ஆடைகள்

NILAM
nether wear specialists


**181, Trinco Road, Batticaloa TP: 065 222 8999 Fax: 065 222 9090**

**21, Dr. Ahamed Fareed Mawatha, Kattankudy -06.**

**TP: 065 224 6620 Fax: 065 224 7447**

**E-mail: info@nilamtraders.com Web: www.nilamtraders.com**

# திரைக்கதை என்றால் என்ன?



திரை என்பது சின்னத்திரை, பெரிய திரை இரண்டுமேயாகும். இங்கு தொலைக்காட்சிக்கு எழுதுவதற்கும், சினிமாவிற்கு எழுதுவதற்கும் சில ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் உண்டு. இங்கு நாங்கள் திரைக்கதை என்பதன் பொருள் என்னவென்று நோக்கினால் காட்சிகள் மூலம் செய்யப்படும் கதை காட்சிகள் என்றால் படங்கள் வார்த்தைகள் அல்ல. A story told in pictures இதனை முதலில் புரிந்து கொண்டோமானால் திரைக்கதை பற்றியும் திரைக்கதை எழுதுவது பற்றியும் எளிதாக விளங்கிக் கொள்ளலாம்.

ஒருவர் தொடர்ச்சியாக பேசிப்பேசிக் கொண்டிருந்தால் இது திரைக்கதை இல்லை. நாடகம் அல்லது லோ பட்ஜெட் மெகா சிரீயல் போன்றாகிவிடும். தவிர ஒரு சம்பவத்தை வர்ணித்தாலும் அது திரைக்கதை இல்லை. இதற்கு உதாரணமாக (பிரபா காரில் வேலைக்குச் சென்றான்) இது வார்த்தைகள் மூலம் சொல்வது. பிரபா வீட்டிலிருந்து புறப்படுவதை ஒரு காட்சியாகவும், கார் அலுவலக வளாகத்தில் செல்வதை ஒரு காட்சியாகவும் காட்டலாம். இது திரைக்கதை.

மணிரத்தினத்தின் பம்பாய் படத்திலிருந்து ஒரு காட்சியை உதாரணமாகக் கூறலாம். மனிஷா கொய்ராலா தன் வீட்டில் தரையில் உட்காந்திருக்க ஒரு சினேகிதி வந்து ஒரு கடிதத்தைக் ரகசியமாக கொடுக்கிறாள். இது தமிழில் எழுதியிருக்கிறது. உடன் டிக்கெட் இணைக்கப்பட்டிருக்கிறது இவ்வளவுதான் காட்சி.

அடுத்த காட்சி அவள் இரவில் வீட்டை விட்டு புறப்படுகின்றாள் இது சொல்லும் கதையைப்பார்க்கின்ற போது அரவிந்தசாமி அவளை காதல் புரிந்து விட்டு பம்பாய் சென்று விட்டார் என்பது முன் கதை. தோழி மூலம் கடிதத் தொடர்பு நடந்து வந்திருக்கிறது. பம்பாயிலிருந்து இதை எழுதியிருக்கிறார். இனி காத்திருக்க வேண்டாம். சொல்லாமல் கொள்ளாமல் ரயிலில் புறப்பட்டு வந்துவிடு இவை அனைத்தும் பத்து செக்கனில் சொல்லப்பட்டு விடுகிறது. இதையே கடிதத்தில் நடுவே வட்டமாக அரவிந்த சாமி முகத்தைக் காட்டி அன்புள்ள காதலி

நலம் நலம் அறிய ஆவல் இந்தக் கடிதத்துடன் டிக்கெட் இணைத்திருக்கிறேன். உடனே புறப்படு என்ற வார்த்தை மூலம் சொல்லப்படுகிறது. ஆனால் இது பழைய முறை நவீன திரைக்கதையில் தவறு.

காட்சிகள் சரியாக அமைந்தால் ஒர் வார்த்தை வசனம் கூட தேவை இல்லை. காட்சிகள் திரைக் கதைக்கு முக்கியம். ஆங்கிலத்தில் ஸடைன்பெக் போன்றோரின் எழுத்துக்கள் எளிதாகத் திரைக் கதையாக மாற்றப்படக் கூடியவை. மனசுக்குள் நினைப்பதைச் சொல்லாமல் வெளிப்புறத்தையும் செயல்களையும் வர்ணித்தல் அது திரைக்கதை வடிவமாகும்.

அசோக மித்திரன், ஜெயகாந்தன் சுந்தர ராமசாமி, ராஜ நாராயணன் போன்றவர்களின் எழுத்துக்களில் இந்த வடிவத்தையாக்க முடியும் சமூக விமர்சனமோ மனசில் நினைப்பதோ இல்லாமல் வெளிப்புறக் காட்சிகள் வர்ணிக்கும் கதைகளைத் திரைக்கதை வடிவத்தில் உள்ள கதைகள் என்று சொல்லலாம். ஆனால் திரைக்கதை என்பது கதை மட்டுமல்ல இன்னும் சில சமாசாரங்களும் உண்டு அவற்றை பார்ப்போமானால்

**ஒலி**

ஒரு திரை கதையில் ஒலி என்பதில் வசனம், சப்தங்கள், திரை, பின்னணி இவை நான்கும் அடங்கும். கதாபாத்திரம் பேசுவது வசனம் இதில் திரைக்கதை ஒரு நாடகத்தைப் போல் என்று சொல்லத் தோன்றும். ஆனால் அது தவறு ஒரு நாடகத்தின் வசனத்தைப் படித்தால் கதைபுரியும். ஆனால் திரைக்கதையில் வசனத்தை மட்டும் படித்தால் கதை புரியாது! புரியக் கூடாது.


நாடகத்தில் வசனம் தான் பிரதானம் திரைக்கதையில் இது மூன்றாம் பட்சம் பின்னணி இசை திரைக்கதையில் சில உணர்ச்சிகளை அடிக்கோடிட்டுக் காட்டும். சில சமயம் மௌனங்கள் கூட உதவும்.

சிறப்பு சத்தங்கள், காலடி ஓசைகள், கதவு திறக்கும் ஓசைகள், பக்கத்து வீட்டு ரேடியோ, தூரத்து ரயிலோசை இவை எல்லாம் கூட திரைக்கதையின் அம்சங்கள் தான். சில வேளை கதைக்கு முக்கியம் என்றால் இதையும் ஒரு திரைக்கதை எழுத்தாளன் சேர்க்க வேண்டியிருக்கும், இவை அனைத்தும் சேர்ந்த ஒட்டு மொத்தமான வடிவமே திரைக்கதை.

**சி.கமல்ராஜ்**


செல்வம் சிலரின் வசமாகி விட்டதால் தான்
பலரும் ஏழைகளாக இருக்கும்படி ஆகிவிட்டது.
இயன்றவரை பலரிடமும் பொருள் இருக்கும்படி
செய்யும் வியாபாரமே சிறந்தது......

-பாரதியார்-


நியு வாணிதாசன் ஸ்டோர்ஸ்
184 A புதிய கல்முனை வீதி,கல்லடி, மட்டக்களப்பு
சிறந்த தெரிவு....
குறைந்த விலையில்....

# ஆபிரகாம் லிங்கன்

மனதால் நேசிக்கும் எந்த ஒரு பொருளையும் மனிதன் என்றாவது ஒரு நாள் பிரிந்தே ஆக வேண்டும். இந் நியதிக்கு யாரும் விதி விலக்கல்ல. இதோ இவரை விட வா உங்களுக்கு தோல்விகள் அதிகம்?



1831 வியாபாரத்தில் தோல்வி
1832 சட்ட சபைத் தேர்தலில் தோல்வி
1834 வியாபாரத்தில் தோல்வி
1835 அவரது காதலி மரணம்
1836 நரம்பு நோய் வந்தது
1838 தேர்தலில் தோல்வி
1843 காங்கிரஸ் தேர்தலில் தோல்வி
1848 மீண்டும் காங்கிரஸ் தேர்தலில் தோல்வி
1855 செனட் தேர்தலில் தோல்வி
1856 துணை அதிபர் தேர்தலில் தோல்வி
1858 செனட் தேர்தலில் மீண்டும் தோல்வி
1861 அமெரிக்க அதிபர் தேர்தலில் வென்று அமெரிக்க ஜனாதிபதியானார்.

இத்தனை தோல்விகளையும் சந்தித்தவர் வேறு யாருமில்லை. உலகம் அறிந்த மிகவும் பிரபலமான அமெரிக்க அதிபர் ஆபிரகாம் லிங்கன் தான். அதிக தோல்விகள், அதிக பாடங்கள் இவையே வெற்றியின் இரகசியம். தடையென தெரிந்தால் தகர்த்தெறி, வருவதை வரும் போது பார்க்கலாம்.

**ஜெயப்பிரியா நவரத்தினம்**



**வேங்கை புரடெக்ஸ்ஷன்**
**குறும்படம், பாடல்களிற்கான தோற்றம்...**
**மட்டக்களப்பு.**

**வெகு விரைவில்!**


"ஏமாற்றுவதைக்
காட்டிலும்
தோற்றுப் போவது
மரியாதைக் குரியது"

ஆபிரஹாம் லிங்கன்

# அழிந்து வரும் நாட்டுப்புறக் கலைகள்



நாட்டுப்புறக் கலைகள் பற்றி பலருக்குத் தெரியவில்லை. பலர் பார்த்ததுமில்லை. எனவே தமிழகத்தின் சொத்தான அவற்றைப் பற்றி அறிந்து கொள்வோம். தமிழகத்தில் இசை, நடனம், கூத்துப் போன்ற பல்வேறு கலைகள் செவ்வியல் கலைகள், நாட்டுப்புறக் கலைகள் என்று இரண்டு பிரிவாகப் பிரித்து ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகச் செழித்து வளர்ந்து நிற்கின்றன. சங்க இலக்கியம் முதல் இன்றுள்ள இலக்கியம் வரை இக்கலைகளைப் பற்றிப் பேசுகின்றன.

முன்பு இழிவாக மதிக்கப்பட்ட பரதக்கலை இப்பொழுது பரதம் கற்பது ஒரு சிறப்புத் தகுதி என்றெண்ணும் அளவுக்கு மிக உயரிய நிலையை அடைந்துள்ளது. நாட்டுப்புறக் கலைகளின் சிறப்பு இப்போது தான் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. ஆனால் பரதம் போல இன்னும் உயர்நிலையை அடையவில்லை. இக்காலத்திலும் பெரிய செல்வந்தர்கள் கூடியுள்ள இடத்தில் நாட்டுபுற நடனங்கள் ஆடப்படு வதில். பரத நாட்டியமே முதலிடம் பெறுகிறது. கிராம மக்கள் முன்னிலையில் தான் நாட்டுப்புற நடனங்கள் ஆடப்படுகின்றனஇ ரசிக்கவும் படுகின்றன. நாட்டுப்புற நடனம் என்பதற்கு ஓர் இன மக்களின் நடனம் என்று பொருள். இது யாரால் உருவாக்கப்பட்டதென்று அறிய முடியவில்லை.

**வில்லுப்பாட்டு**

இக்கலை பத்து நூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்தது. தமிழகத்தின் தென் மாவட்டங்களான குமரி, நெல்லை, மாவட்டங்களில் வில்லிசை அல்லது வில்லுப்பாட்டு மிகப் புகழ் பெற்றகலையாக உள்ளது. சிற்றூர்களில் உள்ள தெய்வங்களுக்கு வழிபாடு நடத்திக் கொடைவிழா எடுக்கும் போது தெய்வங்களின் வரலாறுகள், தெய்வநிலை பெற்ற விடயங்கள்இ வரலாறுகள் ஆகியவற்றை மக்களிடம் எடுத்துச் சொல்ல இக்கலை பெரிதும் பயன்படுகின்றது. வில்லினை முதன்மைக் கருவியாகவும், உடுக்கு, குடம், தாளம், கட்டை ஆகியவற்றைத் துணைக் கருவியாகவும் கொண்டு ஆற்றுகை நடத்தப்படுகின்றது. இந்த இசைக் குழுவின் முதல்வராக அமர்ந்து காணப்படுபவர் புலவர் எனப்படுவார். அவர் கதை சொல்லுவதிலும்இ பாட்டுப் பாடுவதிலும்இ நடிப்பதிலும் காலத்திற்கு தக்க அரசியல், பொருளாதார சமூக அடிப்படையிலான நகைச்சுவை துணுக்குகள் சொல்வதிலும் வல்லவராக இருப்பார். மரபு வழியிலமைந்த தென்மாவட்ட வில்லுப்பாட்டுகளில் புகழ் பெற்றது "ஐயன் கதை" எனப்படும் சாஸ்திரிய கதை ஆகும். இதிகாசம் புராணம் தொடர்பான கதைகள், சமூகப் பாங்கான

கதைகள் எனப்பல கதைகள் இன்றும் குமரி மாவட்ட சிறு கோயில்களில் வில்லிசையாக நடைபெறுவதைக் காணலாம்.

கணியன் கூத்து குமரி, நெல்லை மாவட்டங்களில் சிறந்து விளங்கும் மற்றொரு கலை இந்தக் கணியன் கூத்து இதற்கு "மகுடாட்டம்" என்ற மற்றொரு பெயரும் உண்டு. சுடலை மாடன் பாட்டு முதன்மையாகவும்இ அம்மன் பாட்டு அடுத்த நிலையிலும் இதில் இடம் பெறுகின்றன. இக்கூத்தில் தலைமைப் பாடகர்இ உதவிப்பாடகர்இ மகுடக்காரர் மூவர். பெண் வேடக்காரர் இருவர் என எழு பேர் பங்கு பற்றுவார். இதில் மகுடம், அலங்கை போன்ற இசைக் கருவிகள் இடம் பெறும். மகுடம் பெரிதும் வாசிக்கப்படுவதால் இதற்கு மகுடாட்டம் என்ற பெயர் வந்தது. பூவரசம் மற்றும் வேப்பமரக் கட்டைகளைக் கொண்டு செய்யப்படும். இந்த மகுடத்தில் எருமைத் தோல் போர்த்தப்படுகிறது. தலைமைப் பாடகர், பிற்பாட்டுக்காரர்இ மகுடக் காரர்கள் ஓர் அரை வட்டமும், பெண் வேடதாரிகள் ஓர் முழு வட்டமும் கூத்தில் உருவாகிறது. இதனை நாடகம் சார்ந்த கூத்து எனவும் கூறுவார்.

### பிறக் கூத்துக்கள்



நெல்லை மாவட்டத்தில் கரகாட்டம்,புலிஆட்டம்,ஒயிலாட்டம், களியாட்டம்இ பெருமாள் ஆட்டம்,நால்வர் ஆட்டம்இ மாடு ஆட்டம், குறவன் - குறத்தி ஆட்டம், காளி ஆட்டம், தோற்பாவை கூத்துப் போன்ற பல கலைகள் நடத்தப்படு கின்றன. அவற்றில் புலி ஆட்டம், பெருமாள் ஆட்டம், தோற்பாவைக் கூத்து ஆகியன எல்லாம் அழிந்து வருகின்றன.

இவற்றில் நாதஸ்வரம், உறுமி, பம்பை, தவில், சுருதிப்பெட்டி, வில்கோல், கிளாரிநெட் போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப் படுகின்றன. மதுரை மாவட்டத்தில் கரகம், வட்டத்தப்பு, குறவன் - குறத்தி, இராஜாராணி, நால்வர் ஆட்டம், மாடு ஆட்டம், பபூன்இ காவடி ஆட்டம்இ பொய்க்கால் குதிரை ஆட்டம், தேவராட்டம்இ ஒயிலாட்டம் முதலியன நடத்தப்படுகின்றன. இவற்றுள் கரகம்இ காவடி ஆட்டம் தோற்பாவைக் கூத்து ஆகியன அழியத்தக்க நிலையில் உள்ளன.

### தெருக்கூத்து

தமிழகத்தில் எல்லாக் கிராமங்களிலும் தெருக்கூத்து இன்றும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. கோடைப் பருவத்தில் கோவில் விழாக்களில் தெருக்கூத்து நடைபெறுவதை இன்றியமையாத ஒன்றாக மக்கள் கருதுகின்றனர். இரவு நேரங்களில் கோயிலருகே அமைந்திருக்கும் பெரிய வெளி அல்லது நாற்சந்திகளில் கூத்து நடத்தப்படும். தெருகூத்தில் பெண்கள்

ஆடுவதற்கு அனுமதிக்கப் படுவதில்லை. முகத்தில் அரிதாரம் பூசிக் கொண்டு தலை, தோள், மார்பு, கைகள் ஆகியவற்றில் மரக்கட்டையாலான அணிகலன்களை அணிந்து கொள்வார். கூத்தைச் சொல்லி, இராகதாள வகைகளையும் சொல்லிக் கொடுப்பார். தெருக்கூத்தில் முக்கியமான ஒருவர் கட்டியக்காரன் ஆவார். இவருக்கு "பபூன்", "விதுஷகன்", "சூத்திரகாரி" போன்ற வேறு பெயர்களும் உண்டு. திரைக்குப் பின்னால் இருந்து தன்னைப் பற்றிப் பாடிய பின் திரை விலக்கப்பட்டு செல்லுவது சிறிய பாத்திரங்களைத் தானே ஏற்பது, கூத்தை முடித்து வைப்பது போன்ற பணிகளை இவர் செய்வார்.



தெருக் கூத்துக் கலடு வெண்பா, விருத்தம், அகவல் போன்ற பாக்களையும் நாட்டுப்புறச் சிந்து வகைகளையும் பாட வல்லவர்களாய் இருப்பார்கள். இசைக்குழுவில் மிருதங்கம், சுருதிப்பெட்டி, தாளம் முக வீணை போன்ற இசைக் கருவிகள் இருக்கும். தெருக்கூத்து மற்ற நாட்டுப்புறக் கலைகளைப் போல் பொழுதுபோக்காக ஆடப்படாமல் பக்தியைப் பரப்புவதற்காக ஆடப்படுகின்ற தெய்வீகக்கலையாகும். தமிழகத்தின் தெருக்கூத்து ஆந்திராவின் வீதி நாடகத்தையும் கர்னாடகாவின் யட்ஷகானத்தையும் ஒத்திருக்கிறது. இத்தகைய நாட்டுப்புறக் கலைகள் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து வருகின்றன. இவற்றை அழியாமல் காப்பதற்கு இன்றைய இளைஞர்கள் முன்வர வேண்டும். அதற்கு அரசு கை கொடுக்க வேண்டும்.

மீண்டும் சந்திப்போம்.

**வெ.நிலக்ஷன்**

"தேவைக்கு மேலே பொருளும்,
திறமைக்கு மேலே புகழும் கிடைத்துவிட்டால்
பார்வையில் படுவதெல்லாம் சாதாரணமாகத்தான்
தோன்றும்"

-கண்ணதாஸன்-

# எனக்கென்று ஓர் சொந்தம்...



கருவறையில் உதித்த

எந்தன் உயிருக்கு

நிலையில்லா உலகினிலே

நிஜமான ஓர் உறவு

இன்றுவரை உயிர்வாழ்கிறது

எனக்காக....

நிஜமற்ற உறவுகள் இருந்தபோதும்

நிஜமாய், நிழலாய், உறவாய்

இவ் அவனியிலே வாழ்கிறாள்

என் அன்னையவள்

எனக்கென்று ஓர் சொந்தமாய்....

**ஜீவனா சின்னராசா**

நல்லவராய் இருப்பது நல்லதுதான்!
ஆனால்
நல்லது கெட்டது தெரியாத
நல்லவராய் இருப்பது ஆபத்தானது
- பெர்னாட்ஷா



# IDM Nations Campus
## Batticaloa

### Edhat Internationl Diploma - 5 Months

Computing / Management / Engineering / QS /Psychology / Film & TV Production

### Edhat Internationl Higher Diploma - 15 Months

Software Development / Computer Network / Engineering / Business Maanagement / Finance / Marketing / HR/ Film & TV Production

### BA(Hons) / BSc(Hons) - 12 Months

Software Development / Computer Network / Engineering / Business Maanagement / Marketing / HR

### Special Courses for University Students.

- Diploma in Film & TV Production
- Diploma in Digital Animation
- Diploma in Web Engineering
- Diploma in Graphics Designing
- Diploma in Video editing
- Diploma in English
- Diploma in Tourism

இவ் விண்ணப்பத்தை பூர்த்திசெய்து கையளிக்கும் முதல் 50 மாணவர்களுக்கு 30% விசேட கட்டணக்கழிவு வழங்கப்படும்

30% Off

Full Name : ....................

Address : ....................

Phone No : ....................

Course Title : ....................

**No. 40/1, Bar Road, Batticaloa.**
T.P: 065 222 9379 / 065 365 9136 / 077 710 2755
www.idmbatticampus.com / email: batti@idmcc3.lk

# சாதி அரக்கா....

கறுப்பை குறைவாக நினைப்பதும்
பிறப்பை கேவலமாய் பார்ப்பதும்
தேறாத மனங்களில் நஞ்சாகிப் போன
ஆறாவது அறிவின் அடையாளம்

உடுத்துவது கறுப்பில் வேண்டும்
உச்சி முடி கறுப்பில் வேண்டும்
வணங்கிடும் இறைவன் கறுப்பில் வேண்டும்
ஆனால்!
வாழ்ந்திடுவோர்
கறுப்பில் வேண்டாமோ?



உழவனின் விளைச்சல் வேண்டும்
பழுதுபார்க்க பாட்டாளி வேண்டும்
பக்கத்தில் வந்து நிற்க மட்டும்
பாழாய் போன சாதியால் வேண்டாமோ?

**"முல்லை புயல்"**

"நம் பிறப்பு வேண்டுமானால் ஒரு சம்பவமாக
இருக்கலாம். ஆனால்! நம் வாழ்வு
ஒரு சரித்திரமாக இருக்கவேண்டும்"

# ஓவியம் பற்றிய அறிமுகம்

ஓவியத்தின் தொன்மை வரலாறானது வரலாற்றிற்கு முற்பட்டகால மனிதர்கள் உருவாக்கிய கலைப்பொருட்களில் இருந்து தொடங்குவதுடன் மனித சமூகத்திலுள்ள எல்லாப் பண்பாடுகளையும் தழுவியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ஓவியக்கலையின் தோற்றமும், வளர்ச்சியும், அதன் வரலாறும் மிகத் தொன்மையானது என்பதனை அதன் குறியீட்டு முறைகள் எடுத்துக்காட்டி நிற்கின்றன. தொடக்க காலத்தில் ஜீவனோபாய உத்தியாகவே குறியீட்டுவரைபு (Symbolic Drawings) முறைகளினைப் பயன்படுத்தி, குகைகளிற்குள்ளிருந்த ஓவியக் கூடங்களில் ஓவியங்கள் உருவாகின. இன்றைய ஓவியக்கலை வரலாறானது பழங்காலத்தில் இருந்தே தொடர்ந்து வரும் ஒரு கலை மரபைக் குறித்தாலும் அதன் நவீனயுகப் பயன்பாடானது பல்பக்கப் பண்பாடு களையும், கண்டங்களையும் மேவி, காலங்கடந்து வந்து, மொழிகடந்து, அறிவியலாளர்களை இணைக்கும் ஓர் ஊடகமாக இம் மரபு 21ம் நூற்றாண்டிலும் தொடர்கின்றது. 21ம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதிவரை, ஓவியம் சமயத் தொடர்புள்ள செந்நெறிக்கால அலங்காரங்களோடும், அதிக காட்சிகளை வெளிப்படுத்தும் விதமாகவே வெளிவந்துள்ளன. என்பதும் குறிப்பிடத்தக்கது.





ஓவியம் பற்றி ஆராயுமிடத்து முதலில் எடுத்துக் கொள்ளப்படுவது புராதன குகைச்சித்திரங்கள் தொடர்பானவையாகும். உலகிலே சித்திரக்கலை ஆரம்பித்த காலத்தை உறுதியாக கூற முடியாவி ட்டாலும் வரலாற்றுக்கு முற்பட்ட காலக்கற்குகைகளில், தற்கால மனிதர்களால் வரையப்பட்ட மிகப் பழமையான ஓவியங்கள் பல ஆய்வின்போது கிடைத்துள்ளன. சிறந்த சித்திரங்கள் கிழக்கு ஐரோப்பா, வடஆபிரிக்காப் பிரதேசத்து குகைகளில் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வரலாற்றுக்கு முற்பட்ட பழங்கற் காலத்தினை தொல் பொரு ளாளர்கள் மூன்று பிரதான கால கட்டங்களாகப் பிரித்துக் கூறியுள்ளனர்.

கீழைப் பழங்கற்காலம் கி.மு. 360000 – கி.மு. 100000

மத்திய பழங்கற்காலம் கி.மு. 100000 – கி.மு. 40000

மேலைப் பழங்கற்காலம் கி.மு. 40000 – கி.மு.12000

வரை உள்ள காலப் பகுதியாகும்.

இதில் முதற் கற்காலப் பகுதியில் இருந்து முக்கியமான ஆக்கம் கிடைக்கப் பெறாவிடினும் கடினமான யானைத் தந்தத்திலான ஆயுதங்கள் சில கற்குகைகளில் இருந்து கிடைத்துள்ளன. சிறந்த சித்திரங்கள் கிடைக்கப் பெற்றகாலமாக மற்றைய இரண்டு கற்காலங்களும் கணிக்கப்படுகின்றன. இவற்றிடையே கூடுதலான ஓவியங்கள் காணப்படுவது மத்திய மற்றும் மேலைப் பழங்கற்காலத்தில் வரையப்பட்டவைகள் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

பிரான்ஸில் சிலகுகைகளும் ஸ்பானியாவில் சிலகுகைகளிலும் இச் சித்திரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இச் சித்திரங்கள் மூலம் அக்காலத்து மனிதர்களது கலைரசனை, கலைத்திறன், வாழ்க்கை முறைகள் போன்ற பல தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

வேட்டையாடுவதை தொழிலாகக்கொண்டு வாழ்க்கை நடாத்திய கற்குகை வாசிகள் தாம் கண்ட விலங்குகளை, அவற்றின் அங்க அசைவுகளை தாம் வாழ்ந்த குகைச் சுவர்ப்பரப்புகளிலும், முகடுகளிலும் வரைந்துள்ளனர்.

பெரும்பாலும் கருப்பொருட்களாக கொள்ளப்பட்டவை அன்றாடம் அவர்களது ஜீவனோபாயத்தின் பொருட்டு இறைச்சிக்காக வேட்டையாடிய எருது, மரை, காட்டுப்பன்றி, காண்டாமிருகம், மமத் (தந்தம் பருத்த யானை), பைசன் எருது, குதிரை போன்ற மிருகங்களின் வடிவங்களும் சில இடங்களில் மனிதர்களின் பல்வேறு செயற்பாட்டுடன் கூடிய உருவவெளிப்பாடுகளையும் வரைந்து வர்ணம் தீட்டப்பட்டுள்ளனர்.

சித்திரங்களில் காணப்படும் விலங்குகள் இயற்கை அமைப்பிலும் அவற்றின் உண்மையான பிரமாணத்திலும் உயிர்த்தன்மையுடனும், முப்பரிமாண இயல்புடனும், அவற்றின் அசைவுகளை வெளிக்காட்டும் மெய்நிலைகளிலும் மிகச் சிறப்பாக வரைந்து காட்டப்பட்டுள்ளன. கூரிய ஆயுதங்களைக் கொண்டு (கல், எலும்பு, கொம்பு, தந்தம்) போன்றவற்றால் புறவடிவை ஆழமாகத் தோண்டி அவற்றின் மிருக இரத்தம், கொழுப்பு, மண்வகைகள், ஆகியவற்றை உபயோகித்து தயாரித்துக் கொண்ட வர்ணங்களைக் கொண்டு ஓவியங்கள் வரைந்து தீட்டப்பட்டுள்ளன.

கற்குகைகளில் வாழ்ந்த இம்மக்களிடம் இவ்வகையான மிருகங்களின் சித்திரங்களை வரைவதற்குரிய அடிப்படைக் காரணங்கள் பல காணப்படுகின்றன. ஆதிமனிதன் மூட நம்பிக்கை காரணமாக தாம் வேட்டையாடிய மிருகங்களின் ஆத்ம சாந்தியின் பொருட்டு வரைந்திருக்கலாம் எனவும், தமது ஓய்வு நேரத்தை அழகியல் ரசனை உணர்வின் மூலம் காதலித்து உள்ளனர் எனவும், இவ்வாறு பிராணிகளை வரைவதனால் மேலும் பல விளக்கங்கள் தமக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையிலும் இவ் ஓவியங்களை வரைந்திருக்கலாம் எனப் பல கருத்துக்கள் நிலவுகின்றன.

வரலாற்றுக்கு முற்பட்ட கால ஐரோப்பிய கற்கால குகை ஓவியங்கள் அமைந்துள்ள கலைக்கூடங்கள் பின்வருமாறு:

1. அல்ராமீரா குகை
2. கோகுல் குகை
3. லாஸ்கோ குகை
4. பொன்டிகோமே குகை

என்பனவாகும். இவற்றுள் பெரும்பாலானவை பிரான்சிலும், வடஸ் பெயினிலும் உள்ள குகைகளிலே கலைக்கூடங்களாக அமைந்திருப் பதனை அவதானிக்க கூடியதாக உள்ளது. இவ்வாறு கிழக்கு ஐரோப்பாவில் உருவாகிய ஓவியமரபானது தென்னாசியா, தென்கிழக்காசியா போன்ற பிரதேசங்களிலும் அதன் செல்வாக்கினைச் செலுத்தியது. இந்த வகையில் இந்தியாவில் தமிழகத்தை நோக்கினால் தமிழகத்தில் கற்கால குகைகளிலே மிருகங்களை வேட்டையாடுவதையும் வேறு சில வகையான குறியீடுகளையும் காணக் கிடைக்கின்றது.

சங்ககாலத்திலே தமிழர்களிடையே ஓவியக் கலை நன்கு வளர்ச்சி அடைந்த நிலையில் இருந்ததற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. பிற்காலத்தில் திராவிடர் அல்லது தமிழர் சம்மந்தப்பட்ட ஓவியங்கள் பெரும்பாலும் சுவரில் எழுதப்பட்ட ஓவியங்களாக பின்வரும் மையங்களில் வரையப்பட்டுள்ளமையைக் காண்கின்றோம்.

1. பேர் சொல்லும் ஓவியங்களான பனைமலை ஓவியம்
2. காஞ்சி கைலாசநாதர் கோவில்
3. சித்தன்னவாசல் குகைகள்
4. தஞ்சைப் பெரியகோயில்
5. மதுரை நாயக்கர் கல்யாண மண்டபம்

இந்த வகையில் இலங்கையிலும் ஓவியத்தின் வளர்ச்சி பற்றி நோக்கினால் மகிந்தரின் வருகைக்கு முன் இருந்த குகை ஓவியங்கள், அநுராதபுரக்கால, பொலநறுவைக் கால, கண்டிநகர்க் கால ஓவியங்கள் என ஆய்வாளர்கள் ஆராய்ந்து தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளமையைக் காண்கின்றோம். இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட கால குகைஓவியங்கள் பின்வரும் மையங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவையாவன:

1. தந்திரிமலைக்குகை
2. தொறவக்ககுகை
3. பில்லாவக் குகை

போன்ற இடங்களில் புராதான ஓவியங்களையும், குறியீடுகளையும் அவதானிக்க கூடியதான உள்ளது. இவ்வாறு ஆரம்பித்த ஓவியக் கலையானது பின்னர் சீகிரிய சுவரோவியமாகப் பரிணமித்துப் பின்னர் பொலனறுவைக்கால வளர்ச்சி நிலைகளைக்கடந்து கம்பளை, கண்டி கோட்டை மற்றும் கொழும்பு நகர்க்கால ஓவியங்களையும் குறிப்பிடலாம்.

தமிழருக்கு என்ற ஓவிய மரபு 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் இருந்து ஆரம்பமாகியது எனலாம். இதில் யாழ் மூத்த ஓவியரான S.R. கனகசபை குறிப்பிடத்தக்கவர். இவர் வின்சன்ட் விடுமுறைக் கால ஓவியக் கழகம் ஒன்றினை ஸ்தாபித்தார்.

1943ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 43குழு எனப்படும் இலங்கை ஓவியக் கலைஞர்களை, ஓர் புதிய வழிப் பாதைக்கு மாற்றிய காலமாக கொள்ளப்படுகின்றது. 43குழுவிலும் இலங்கை மூத்த ஓவியரான S.R. கனகசபை உறுப்பினராக செயற்பட்டார். இலங்கையில் பாரம் பரியமாக இருந்து வந்த ஓவிய பாரம்பரியம் இக் காலப்பகுதியில் தகர்த்தெறியப்பட்டது எனலாம். ஐரோப்பிய காலனித்துவ ஆட்சிக் காலத்தில் மேலத் தேய ஓவியப் பாணி இங்கு உட்புகுத்தப்பட்ட காலமாகும்.

20ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் கொழும்பு அரசினர் நுண்கலைக் கல்லூரி J.D.A.Perera வினால் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் பல கலைஞர்கள் ஓவியம், சிற்பம் துறை சார்ந்து பயிற்சிவிக்கப்பட்டனர். அதில் பல தமிழ் ஓவியக் கலைஞர்களும் உருவாகத் தொடங்கினர்.

21ஆம் நூற்றாண்டின் ஆரம்ப பகுதியில் ஓவியக் கலை பல்கலைக்கழக மட்டங்களிலும் ஆரம்பிக்கப்பட்டது. இதில் குறிப்பாக யாழ் பல்கலைக்கழகத்தில் 1999 ஆம் ஆண்டு போராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் சித்திரமும் வடிவமைப்பும் துறை ஆரம்பிக்கப்பட்டு பல இளந்தமிழ் ஓவியக் கலைஞர்கள் உருவாக்கப்பட்டனர். அந்த வகையில் சித்திரமும் வடிவமைப்பும் துறையில் இருந்து முதல் மூன்று பிரிவில் திறமை அடிப்படையில் தேர்ச்சி பெற்ற மூன்று தமிழ் ஓவியக் கலைஞர்கள் விரிவுரையா ளர்களாக ஓவியச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு இவ் ஓவியர்கள், அவர்களுடைய ஓவியப் படைப்புக்கள், அப் படைப்புக்களின் அழகியல் நோக்கு, ஓவியம் சார்ந்த சமூக செயற்பாடுகள் முதலியன இங்கு விரிவாக ஆராயப்படுகிறது. இவர்களுடைய ஓவியப் படைப்புக்களில் நிலக் காட்சி ஓவியங்கள், பிரதிமை ஓவியங்கள், கருத்து வெளிப்பாட்டு ஓவியங்கள், நவீன ஓவியங்கள் என பல வகைகளில் பார்க்கப்பட்டு அதன் அழகியல் சார் பண்புகள் விளக்கப்படுகின்றது. நிலக் காட்சி ஓவியம் (Landscape Painting) என்பது ஒரு காலத்தில் படிமக்கட்டியாக விளங்குகின்றது. இயற்கை எழிலை திறந்த வெளியில் பதிவு செய்யும் படைப்பாகக் காணப்படுகின்றது. இந் நிலக் காட்சி ஓவியங்களில் பிரதேச இயல்பு, இயற்கை, காலநிலை, கலாச்சாரம், ஓவியனின் மனோநிலை மற்றும் கையாள்கை முதலியன முக்கிய பங்கு வகிக்கின்றது. ஓவியன் இயற்கையில் எதனைக் காண்கின்றானே அது அவனுடைய படைப்பில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஒரு பிரதேசத்தின் தன்மையை தீர்மானத்தில் காலநிலையும் முக்கியம் பெறுகின்றது. இயற்கை அழிவுகள், மனித செயற்பாடுகள், காலநிலை வேறுபாடுகள் மூலம் மாற்றமடைகின்றது. அத்துடன் பிரதேச இயல்பு என்பது நிலக் காட்சி ஓவியத்தில் முக்கியமாக குறிப்பிட வேண்டிய ஓர் அம்சமாகும். ஓர் பிரதேசத்தின் தன்மையினை மரம், நிலம், பாதை, வெளிகள், நீர் நிலங்கள் என்பனவற்றால் தீர்மானிக்கப்படுகின்றன.

கிராமம், நகரம் என்பவற்றை பிரதேசத்தின் தன்மையினூடாக நாம் இனங்கண்டு கொள்ளலாம். அடுத்து கலாச்சாரம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கக விடயமாகும். இது நிலக் காட்சி ஓவியங்களில் ஓர் பிரதேசத்தின் இயல்பு, அப் பிரதேச மனிதர்களின் உடை, அணிகலன்கள், கட்டிடங்களினூடாக அவதானிக்க முடியும். ஓவியனின் மனநிலையும் கையாள்கையும் என்பது இங்கு வர்ணத்தினூடாக கொண்டு வரப்படுகின்றது. போரினால் பாதிக்கப்பட்ட ஓர் சூழலை வெளிப்படுத்தும் போது அதன் உணர்வைக் காட்ட வர்ணத்தின் பண்பினை அதிகம் கையாள்கின்றார். வர்ணக் கையாள்கை நிலக் காட்சி ஓவியத்தில் பல வகைகளில் உபயோகிக்கப்படுகின்றது. நிலக் காட்சி ஓவியத்தில் இயற்கை நிலக் காட்சிகள், வரலாற்று நிலக் காட்சிகள், கதை கூறும் நிலக் காட்சிகள், நீர்க் காட்சிகள் எனப் பல வகையில் காணப்படுகின்றது.

அடுத்து நிலைப் பொருட்காட்சி ஓவியம் (Still Life Painting) பற்றி நோக்கும் போது இது Indoor இல் படைக்கப்படுகின்ற அசையாப் பொருட்களைக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்ட ஓர் நிலையான காட்சிப் பொருட்களாக அமைகின்றது. இங்கு கட்டுப்பாடான வர்ண ஒளிப் பாவனை காணப்படும். இதில் இயற்கையான பழங்கள், காய்கறிகள் முதலியவையும் மனிதனால் செயற்கையாகப் படைக்கப்பட்ட பொருள்களும் இடம்பெறும். உள்ளகத்தில் படைக்கப்படுவதால் குறிப்பிடத்தக்க ஒளிநிழலைக் கொண்டிருக்கும். அத்துடன் சமநிலை, வர்ணநகர்வு, அளவுத் திட்டம் என ஓவியப் பண்புகளினூடாகப் படைக்கப்படும்.


அடுத்து பிரதிமை ஓவியம் பற்றி நோக்கும் போது இது பிரதிமைக்குரியவரின் Character ஐ ஓவியன் தனது திறமையினால் வெளிக் கொண்டுவருவர். இதில் மனித உருவ முழுப் படைப்பாகவும், அரைவாசியுடனும் வரையப்படுகின்றது. இதில் ஒளிநிழல், சமநிலை, மனித உடற்கூற்றுப் பண்புகள், பாவம், சூழ்நிலை, அசைவு, வர்ண நகர்வு முதலியன முக்கியம் பெறுகின்றன.

அடுத்து கருத்து வெளிப்பாட்டு ஓவியம் என்பது ஓர் செயலை, சம்பவத்தினை அல்லது ஓர் கருத்தை வெளிப்படையாக எடுத்துக் காட்டும் இயல்புடையது. யதார்த்தமாக எமது சூழலில் இடம் பெறும் சம்பவக் காட்சிகள் இங்கு முக்கியம் பெறுகின்றன.

நவீன ஓவியம் என்பது ஓர் கருத்தை மறைமுக வர்ணங்கள் அல்லது குறியீடுகள் மூலம் சுவைஞனைக் கண்டுபிடிக்க வைக்கப்படும் படைப்பாக காணப்படுகிறது. கலைஞனுக்கு கருத்துச் சுதந்திரம் காணப்படாமையினால் மறைமுகமாக இதனைக் கையாள்கின்றான். அத்துடன் புகைப்படக்கருவி மற்றும் கணனியில் படைக்கமுடியாத பல ஓவியங்களைக் கலைஞன் நவீன மற்றும் சமகால ஓவியங்களில் படைக்கின்றான் இவ்வாறு ஓவிய கலைப்பற்றி அறிந்து கொள்ளலாம்.

**செ.ஐங்கரன்**

# வாழ்த்துகின்றோம்....




"ஈழத்து தமிழ் நாடக வரலாற்றில் தானும் ஒரு பங்கினை எடுத்து வழி நடத்திக் கொண்டிருப்பவர் பேராசிரியர் சி. மௌனகுரு அவரை கௌரவிக்கும் முகமாக 2014ம் ஆண்டு அரச நாடக விருது வழங்கும் விழாவில் கலாச்சார திணைக்களம் "நாடகக் கீர்த்தி" விருதினை வழங்கி பெருமைப் படுத்தியது.

"நாடகக் கீர்த்தி" விருது பெற்ற எங்கள் ஆசான் பேராசிரியர் சி. மௌனகுருவை "கலைக் கோபுரம்" சஞ்சிகையின் சார்பாக மனதார வாழ்த்துகிறோம்.

நீ நடந்து போக பாதை இல்லையே என்று கவலைப்படாதே
நீ நடந்தால் அதுவே ஒரு பாதை.

# பேராசிரியர் மு. இராமசாமியுடன் ஒரு நாள்



சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் 2013/08/24 அன்று நாடகத்துறை மற்றும் நுண்கலைத் துறையின் ஏற்பாட்டில் தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்திருந்த பேராசிரியர்மு. இராமசாமியுடனான சந்திப்பு இடம் பெற்றது. இச்சந்திப்பில் நாடகத் துறை, மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், ஆர்வலர்கள் போன்றோர் இணைந்து கொண்டனர். நாடகம் பற்றிய தெளிவுரைகளை வழங்கிய தமிழ் நாட்டுத் தஞ்சைப் தமிழ் பல்கலைக்கழக நாடகத்துறை பேராசிரியரும் நிஜ நாடக இயக்கத்தின் ஸ்தாபகருமாகிய மூரா என்றழைக்கப்படும் மு. இராமசாமி இந்திய நாடக வரலாற்றில் தவிர்க்க முடியாத மிக முக்கியமான நாடகச் செயற்பாட்டாளராவார். இவரின் நெறியாள்கையில் உருவான பெரியார், கலிலியோ, ஸ்பாட்டகஸ் போன்ற பல நாடகங்கள் இன்றும் மக்கள் மத்தியில் பேசப்பட்டு வருகின்றன. மேலும் இவர் மாயன், பிதாமகன், பருத்திவீரன், சண்டக்கோழி, ராம் போன்ற தமிழ் சினிமாத் திரைப்படங்களில் நடித்துள்ளமையும் குறிப்பிட்டாக வேண்டிய விடயமாகும்.

இச்சந்திப்பு நிகழ்வில் ஏற்பாட்டாளர்களின் வேண்டுகோளுக் கிணங்கவும், பங்கு கொண்டவர்களின் விருப்பத்திற்கு அமையவும் பேராசிரியர் மு. இராமசாமி பழம்பெரும் தமிழ் நாடக இலக்கியங்கள் பற்றி கருத்துரைகள் வழங்கினார். அதற்கமைய ஆரம்பத்தில் தொல்காப்பியம் பற்றிக் கருத்துரை வழங்கினார். இதனைத் தொடர்ந்து தேனீர் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டு மீண்டும் தொடங்கிய சந்திப்பில், ஐம்பெரும் காப்பியங்களுள் தனித்துவம் மிக்க நாடகக்காப்பியமான சிலப்பதிகாரம் பற்றி மிகத் தெளிவாகவும், ஆழமாகவும், உணர்ச்சி பூர்வமாகவும் பேராசிரியர் தெளிவுரை ஆற்றினார்.

சிலப்பதிகாரத்தின் தனித்துவமான சிறப்புக்கள், நாடகக்காப்பியம் என கூறுவதற்கான காரணங்கள் நாடகச் சிறப்புக்கள் (மோதுகை, பாத்திர வார்ப்பு, நடிப்பிற்கான தளம்) என்று உதாரணங்களோடு உணர்ச்சி பூர்வமாக விளக்கமளித்தமை கேட்டுக் கொண்டிருந்தவர்களை

பிரமிப்பூட்டியது. பின்னர் இது தொடர்பாக வினாக்கள் தொடுக்கப்பட்டு பதில்கள் பகிரப்பட்டதுடன் காலை அமர்வு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு மதிய இடைவேளைக்காக அனைவரும் சென்றனர்.

மதிய உணவைத் தொடர்ந்து மாலை அமர்வில் மூராவின் நெறியாள்கையில் உருவான திருநங்கையர் நாடகமான வலி அறுப்பு மற்றும் இவர் நடித்த வியாபாரமாயணம் (கதை - மு. இராமசாமி, நெறியாள்கை - ராஜிவ் கிருஸ்ணா) ஆகிய இரண்டு நவீன நாடகங்கள் திரையிடப்பட்டு அது பற்றிய கலந்துரையாடலும் இடம் பெற்றது.

மிகச்சிறந்த நாடக ஆளுமையான பேராசிரியர் மு.ராமசாமியிடம் இருந்து காலை அமர்வில் ஆழமான விரிவுரையினையும் மாலை அமர்வில் நவீன நாடகங்களின் காட்சிப்படுத்தலினூடாக நடிப்பு மற்றும் ஆக்கத்திறன் நுட்பங்கள் பற்றிய சில விடயங்களையும் நிறைவாக அறிந்து கொண்டமை யாரும் மறக்க முடியாததும், தவிர்க்க இயலாததுமான தருணமாக அமைந்தது.



பேராசிரியர் இந்த வயதில் இளமையாகவும். சுறு சுறுப்பாகவும் இருந்தமை அவரைப் பார்த்து. பழகி உணர்ந்தவர்கள் அனைவரையும் பிரமிக்க வைத்ததோடு, அவர் எங்களுடன் அணுகியவிதம், எளிமை. வெளிப்பாட்டுத்திறன்

போன்றவை அவரின் மேல் உள்ள மரியாதையை இன்னும் அதிகரிக்கச் செய்தது. அன்றைய சந்திப்பின் முடிவில் நாங்கள் நன்றியுடன் பேராசிரியரை அணுக, அவர் வருகை தந்தவர்கள் அனைவரையும் பாராட்டி, வாழ்த்துத் தெரிவித்து விடை பெற்றுச் சென்றார்.

ஆத்மார்த்தமாக நாடகச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற புலமைமிக்க நாடகக்காரர்களைச் சந்தித்து அவர்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதானது வளர்ந்து வரும் நாடகச் செயற்பாட்டாளர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக அமைகிறது. இச் சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தித் தந்தவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதோடு இது போன்ற சந்தர்ப்பங்கள் தொடர வேண்டியது அவசியமாகும்.

**கி. திருச்செந்தூரன்**

## "எமது சஞ்சிகை வெளிவர உதவிய அனைத்து அன்பான நெஞ்சங்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்....."

❖ எமது நிறுவக பணிப்பாளர் கலாநிதி க.பிறேமகுமார் அவர்களிற்கும், சிரேஷ்ட உதவி பதிவாளர் S.J. கிறிஸ்டி அவர்களிற்கும், மற்றும் நடனத்துறை, நாடகத்துறை, இசைத் துறை, கட்புலத்துறை விரிவுரையாளர்களுக்கும், தகவல் தொழில்நுட்ப விரிவுரையாளர்கள், ஆங்கில விரிவுரையாளர்கள், நூலகச் செயற்பாட்டாளர்கள், கல்வி சாரா ஊழியர்கள் போன்றோரிற்கும் எமது "கலைக்கோபுரம்" சஞ்சிகை சார்பாக நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

❖ ஆக்கங்களை தந்து உதவிய எமது சகோதரர்களுக்கும், மாணவர் ஒன்றியம், விளம்பரதாரர்கள் போன்றோருக்கும் எமது கலைக்கோபுரம் சஞ்சிகை சார்பாக நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

❖ **DFCC** வர்த்தன வங்கி, **MAG** அங்கத்தவர்கள், **Eng. N.** சிவலிங்கம், M.சம்சுதீன் அவர்களிற்கும் எங்கள் உடன் பிறப்பிற்கும் எங்கள் கலைக்கோபுரம் சார்பாக நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

பாராட்டுக்களை விரும்பாத மனிதன் இல்லை. அதேபோல் தன் குறையை திருத்த மற்றவர்களிற்கு வாய்ப்பளிக்காதவன் மனிதனே இல்லை. இதனைக் கொஞ்சம் புரிந்து கொண்ட சராசரி மனிதன் நான். தயவு செய்து தவறுகளைச் சுட்டிக்காட்டுங்கள் நிறைவுகளை பகிர்ந்து கொள்ளுங்கள்.

✓ அன்பான வாசகர்கள், விளம்பரதாரர்களிடமிருந்து அடுத்த இதழிற்கான ஆக்கங்கள், விளம்பரங்களை வேண்டி நிற்கின்றோம்...

**தொடர்புகளுக்கு:-**

**077 0321209**

# MC TRADING

## MC TRADING

| Maruthi Fancy<br>மாருதி (F) பென்ஸி<br>Dealers in Fancy Items<br>&<br>Stationary Items | Inthira Stores<br>இந்திரா ஸ்ரோர்ஸ்<br>Wholesale Dealers<br>For Grocery Items |
|---|---|
| 077 3534641 | 075 2905003,077 3534641 |

| CO-OP<br>Filling Station<br>(LEASER)<br>ARAYAMPATHY - 02<br>24 HOURS SERVICE | Iyappan Building<br>Construction<br>Quality Builders |
|---|---|
| 077 3534641 | 077 3563091 |

**MAIN STREET, ARAYAMPATHY - 02,**
**BATTICALOA.**



Abans Showroom
Life's Good
LG
LAUNCHES
Record breaking
Abans
lenovo
LG
அபான்ஸ்
பிரதான வீதி நொச்சிமுனை, கல்லடி
[விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம் முன்பாக]
Tel : 0652229798
GRAND OPENING
GRAND OPENING